REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2023 ஒக்டோபர் 21 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 250 | Saturday 21, October, 2023 | 10 பக்கங்கள் | 50/-

### மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
## பங்காரு அடிகளார் முக்தி அடைந்தார்



ஆன்மிகவாதி மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் தனது 82ஆவது வயதில் மாரடைப்புக் காரணமாக காலமானார். பங்காரு அடிகளார் மேல்மருவத்தூரில் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தை நிறுவி குருவாக

06

## இலங்கைக்கு விரைவில் 330 மில். அமெ. டொலர் நிதியுதவி
### IMF இன் உடன்படிக்கையால் கடன் மறுசீரமைப்பு துரிதப்படுத்தப்பட்டது



சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் வேலைத்திட்டத்தின் முதலாவது மீளாய்வை நிறைவு செய்த பின்னர் ஏற்பட்ட அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாடு, பல தரப்பு கடன் வழங்குநர்களுக்கு எஞ்சிய தவணைகளை செலுத்துவதற்கும் கடன் மறுசீரமைப்பை துரிதப்படுத்துவதற்கும் உதவுமென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவினால், இந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர், இரண்டாவது தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை பெற்றுக்கொள்ளுமெனவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத்

06

03
### இலஞ்சம் பெற்ற இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உறுப்பினர்
பாராளுமன்ற அமைச்சர் விஜேயதாச குற்றச்சாட்டு

### நிலையான பொருளாதாரத்தை கட்டமைக்க
# அரசியல் நோக்கங்கள் எதுவுமின்றி இலங்கைக்கு ஆதரவளிக்க தயார்
## ஜனாதிபதி ரணிலிடம் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் உறுதியளிப்பு
### இலங்கை உற்பத்திகளை சீனா இறக்குமதி செய்யும் அதேவேளை, இலங்கைக்குள் சீன முதலீடுகளை அதிகளவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளிப்பு



நிலையான பொருளாதாரத்தை கட்டமைக்க எவ்வித அரசியல் நோக்கங்களுமின்றி இலங்கைக்கு ஆதரவளிக்க சீன மக்கள் குடியரசு தயாராக உள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணங்கிச் செயற்படுவதே தனது நோக்கமெனவும், சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்திய உரை, இலங்கையின் மூலோபாய அமைவிடத்தின் முக்கியத்தை எடுத்துக் காட்டியதாக சுட்டிக்காட்டிய சீன ஜனாதிபதி, இலங்கை கொண்டுள்ள மத்தியஸ்தமான நிலைப்பாட்டையும் பாராட்டினார்.

06

## உணர்வுபூர்வமான பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாம்
### சீனா ஜனாதிபதியின் கருத்தை பாராட்டிய அமைச்சர் டக்ளஸ்



காலாவதியான பூகோள அரசியல் தந்திரங்களை புறந்தள்ளிவிட்டு, முரண்பாடுகளற்ற பேச்சுவார்த்தைகளினூடாகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்ற சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் கருத்து தன்னைக் கவர்ந்துள்ளதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

உணர்வுபூர்வமான பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியுமென்ற சீன ஜனாதிபதியின் கருத்தை நிரூபிக்கும் வகையில் தன்னுடைய அரசியல் பயணம் அமைந்துள்ளதாகவும் அந்த நம்பிக்கையுடனையே ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்டு

06

## பாராளுமன்ற கட்டடத்துக்குள் தாக்குதல்; டயனா கமகே, SJB யினர் முறைப்பாடு
### விசாரணைக்கு ஐவரடங்கிய குழு சபாநாயகரால் நியமிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தன்மீது பாராளுமன்ற கட்டடத்துக்குள் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக முன்வைத்த முறைப்பாடு தொடர்பாகவும் ஐ.ம.ச. பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் பெரேரா, ரோஹண பண்டார ஆகியோர் டயனா கமகே தம்மீது தாக்குதல் நடத்தியதாக முன்வைத்த

06

## மின் கட்டணங்களை அதிகரிக்க PUCSL அனுமதி வழங்கியது
### நேற்று முதல் புதிய முறை அமுலாகிறது



மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து நேற்று (20) முதல் மின்சாரக் கட்டணம் 18 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைய 0 முதல் 30 வரையான அலகுகளுக்கான கட்டணம் 10 ரூபாவிலிருந்து

06

### வெளிநாடுகளில் வசிக்கும்
## தமது பிரஜைகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



வெளிநாடுகளில் வசிக்கும் தமது பிரஜைகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பான எச்சரிக்கையை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமே விடுத்துள்ளது. பல்வேறு இடங்களில் அமெரிக்க குடிமக்களுக்கு எதிராக பயங்கரவாத

06

### நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக
## மீலாத் விழா நிகழ்வுகள் முசலி தேசிய பாடசாலையில்!



சிலாவத்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மீலாதுன் நபி விழா சீரற்ற காலநிலை காரணமாக முசலி தேசிய பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

06

## 2030 இல் பாடசாலை மாணவர் சகலருக்கும் இலவச மதிய உணவு
### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



அனைத்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எதிர்வரும் 2030ஆம் ஆண்டளவில் இலவச மதிய உணவை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இந்நிலையில், அடுத்த வருடத்தில் மாணவர்களுக்கான மதிய உணவு திட்டத்தை விரிவுபடுத்த எதிர்பார்த்துள்ளதாகவும்,

06

### பலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டுமென்பது போல்
## இலங்கையிலும் தமிழரின் நியாயமான சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



"பலஸ்தீன நாட்டை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டுமென்று நாம் எவ்வாறு நினைக்கின்றோமோ, அதேபோன்று இலங்கையிலும் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்" என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

06

### பாடசாலைகள் வழமைபோல் இயங்கின;
## வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் முழுமையான வெற்றியல்ல
### பல இடங்களிலும் மக்கள் இயல்பு வாழ்க்கையில்



வடக்கு மாகாணப் பாடசாலைகளில் 98 சதவீத வரவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக, வடமாகாண கல்வித் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று (20) தமிழ்க் கட்சிகளினால் கடையடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும்,

06

## மாகாணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இனத்துக்கும் எழுதி கொடுக்கப்படவில்லை
### முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர

**லோரன்ஸ் செல்வநாயகம்**




இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடென்றும் ஒவ்வொரு மாகாணங்களும் ஒவ்வொரு இனங்களுக்கு எழுதிக் கொடுக்கப்படவில்லையெனவும், முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் திம்புலாகல சிங்களவர்களின் பாரம்பரியமான கிராமமாகும். அப்பகுதியில் வாழும் சிங்களவர்களை

06

### பதுளை – மொரஹெல வீதியில்
## 45 அடி பள்ளத்தில் விழுந்து இ.போ.ச. பஸ் விபத்து
### 67 வயது பெண் பலி, 27 பேர் காயம்



பதுளை – மொரஹெல வீதியின் மெகஹகிவுல நீரூற்றுப் பகுதியில் நேற்று (20) நண்பகல் 12.20 மணியளவில் இ.போ.ச. பஸ் வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 32 பயணிகள் காயமடைந்துள்ளனர். பதுளையிலிருந்து கடவத்தை நோக்கிப்

06

### காங்கேசன்துறை-நாகபட்டினம்
## பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்
### மீண்டும் ஜனவரியில் ஆரம்பம்



நாகபட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகும் பருவப்பெயர்ச்சி மழை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக

06

### வரலாற்றில் முதல் தடவையாக
## யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் ஆதிவாசிகள் குழு

**ஓமந்தை குறூப் நிருபர்**



மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் சிலர் வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு இன்று (21) விஜயம் செய்கின்றனர். ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலஅத்தோ தலைமையிலான 60 பேரைக் கொண்ட ஆதிவாசிகள் குழுவினர் இன்றையதினம்

06

## பலஸ்தீன பேரழிவுகள் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்
### யுத்த நிறுத்தத்துடன் சமாதான தீர்வு அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இம்தியாஸ் எம்.பி. சபையில் தெரிவிப்பு

பலஸ்தீனத்தில் இடம்பெறும் பேரழிவை உடனடியாக நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார். உடனடியாக யுத்த நிறுத்தமொன்றை

06

## நுரைச்சோலையில் மோ. சைக்கிள் விபத்து
### 05 வயது சிறுவன் பலி; இருவர் படுகாயம்

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**



கற்பிட்டி, நுரைச்சோலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (19) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் பலியானதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர். கற்பிட்டியிலிருந்து பாலாவி நோக்கிப் பயணித்த சிறிய ரக லொறியொன்றும் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார்

06

# சர்வதேச செய்திகள்

# காசாவுக்கான உதவிகள் செல்வதில் இழுபறி: மனிதாபிமான அவலம்

## "தரைவழி தாக்குதல் உத்தரவு விரைவில்"




காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து இடைவிடாது வான் தாக்குதல்களை நடத்திவரும் நிலையில் அங்குள்ள மக்களுக்கு உணவு, நீர் அவசியமாகி இருக்கும் சூழலில் காசாவுக்கு அருகில் பெரும் அளவான உதவிப் பொருட்கள் குவிக்கப்பட்டுள்ளன. வரலாறு காணாத தாக்குதலை எதிர்கொண்டிருக்கும் காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலில் குறைந்தது 1400 பேர் கொல்லப்பட்டு மேலும் 200க்கும் அதிகமானவர்கள் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டிருக்கும் நிலையில் ஹமாஸ் அமைப்பை முற்றாக அழிப்பதற்கு இஸ்ரேல் உறுதிபூண்டுள்ளது.

இதற்கு பதிலடியாக இரண்டு வாரங்களுக்கு மேலாக காசா மீது இஸ்ரேல் நடத்திவரும் வான் தாக்குதல்கள் நேற்றைய தினத்திலும் தொடர்ந்து. இதில் உயிரிழந்த பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 4000ஐ தாண்டியுள்ளது. இதில் கால் பங்கினர் சிறுவர்களாவர். 13 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.



2.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது. எகிப்தில் இருக்கும் உதவி வாகனங்கள் வர இன்னும் பச்சை கொடி காண்பிக்கப்படாத நிலையில் காசாவின் மனிதாபிமான நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக ஐ.நா எச்சரித்துள்ளது.

காசாவுக்கு அருகில் இருக்கும் எகிப்தின் எல் அரிஷ் விமானநிலையத்தில் மருந்துகள், நீர் சுத்திகரிப்பு சாதனங்கள் மற்றும் போர்வைகள் என்ற உதவிகள் இறக்கப்பட்டு வருகின்றன. நாளொன்றுக்கு இரண்டு தொடக்கம் மூன்று உதவி விமானங்கள் வருவதாக எகிப்து செம்பிறை சங்கத் தலைவர் அஹமது அலி தெரிவித்துள்ளார்.

காசாவுக்குள் நிலைமை "பேரழிவுக்கு அப்பாலுள்ளது" என்று வளைகுடாவுக்கான யுனிசெப் பேச்சாளர் சாரா அல்சவகாரி தெரிவித்துள்ளார். "காலம் கடந்து செல்வதோடு சிறுவர்கள் இடையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது" என்று அவர் எச்சரித்தார்.



இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இல்லாத காசாவுக்கான ஒரே வாயிலான எகிப்துடனான ரபா எல்லைக் கடவை நேற்று (20) திறப்பதாக இருந்தபோதும் குண்டுத் தாக்குதல்களால் சேதமடைந்திருக்கும் வீதிகளை சரி செய்ய காலம் தேவைப்படுவதாக எகிப்து குறிப்பிட்டுள்ளது.

காசாவுக்கு 20 உதவி லொறி வண்டிகள் செல்ல அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசிக்கு இடையே உடன்பாடு எட்டப்பட்டது. எனினும் இந்த எண்ணிக்கை கடல் அளவு தேவைக்கு ஊசி அளவில் வழங்குவதற்கு ஒப்பானது என்று உலக சுகாதார அமைப்பின் அவசர பிரிவுக்கான பணிப்பாளர் மைக்கல் ரியா சாடியுள்ளார். "அது 2000 லொறி வண்டிகளாக இருந்திருக்க வேண்டும்" என்று அவர் ஜெனிவாவில் தெரிவித்தார்.

இஸ்ரேலில் போர் குரல்

ஹமாஸின் ஒக்டோபர் 7 ஆம் திகதி தாக்குதல் இஸ்ரேலின் 75 ஆண்டு வரலாற்றில் எதிர்கொண்ட மிக மோசமான தாக்குதலாக இருக்கும் சூழலில் இஸ்ரேல் காசா மீது தரைவழி தாக்குதல் ஒன்றுக்கு மும்முரமாக தயாராகி வருகிறது. அதன் தலைவர்களின் குரலும் தாக்குதலை தீவிரப்படுத்துவதாகவே உள்ளது.

இராணுவ உடையுடன் இஸ்ரேலிய பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு காசாவுக்கு அருகில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரை சந்தித்தார். "சிங்கம் போன்று சண்டை பிடிக்கவும், முழு பலத்துடன் வெற்றி பெறவும்" அவர் படைகளை கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லனும் முன்னரங்கு பகுதிக்கு விஜயம் செய்தார். அங்கு தரைவழி தாக்குதல் ஒன்றுக்காக காத்திருக்கும் ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய துருப்புகளிடம், "புதிய உத்தரவு விரைவில் வரும்" என்று தெரிவித்தார்.

"இப்போது உங்களுக்கு காசா தொலைவில் தெரியும். விரைவில் நீங்கள் உள்ளே பார்ப்பீர்கள். உத்தரவு விரைவில் வரும்" என்று ஒரு கடுமையான போருக்கான எதிர்கூறலை அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஹமாஸுக்கு எதிரான போருக்காக அமெரிக்கா மேலும் பல பில்லியன் டொலர்களை செலவிட அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை (19) பின்னேரம் வெள்ளை மாளிகையில் இருந்து தொலைக்காட்சியில் உரையாற்றிய பைடன், ஹமாஸ் இஸ்ரேலின் ஜனநாயகத்தை அழிக்க முயல்கிறது என்றார். இதன்போது ரஷ்ய ஜனாதிபதி புட்டின் மீதும் குற்றச்சாட்டுகளை சுமத்தினார்.

"ஹமாஸ் மற்றும் புடினின் தீவிரவாதமும், கொடுங்கோன்மையும் வெவ்வேறு அச்சுறுத்தல்களைக் கொண்டவை ஆனால் இரண்டுக்குமே அண்டை நாடுகளின் ஜனநாயகத்தை அழித்தொழிப்பதே இலக்கு. இதுபோன்ற சர்வதேச ஆக்கிரமிப்புகள் தொடர்ந்தால் அதனால் ஏற்படும் மோதல்களும், குழப்பங்களும் உலகின் பிற பகுதிகளுக்கும் பரவக்கூடும். இதனால் பாதிப்புகள் அதிகமாகும்.

ஆகையால் இந்தச் சூழலில் இத்தகைய போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கும், இஸ்ரேலுக்கும் பெருமளவில் நிதியுதவி அளிக்க வேண்டும். அதற்காக நான் வலியுறுத்துவேன். இந்த நிதியுதவி அமெரிக்காவின் எதிர்கால நலனுக்கான முதலீடு என்பதைப் புரியவைப்பேன்" என்று ஜோ பைடன் தெரிவித்தார்.

இதனிடையே, இஸ்ரேலுக்கான இராணுவ உதவியாக 10 பில்லியன் டொலர்களை அனுமதிக்க வேண்டும் என ஜோ பைடன் கொங்கிரஸிடம் கேட்க திட்டமிட்டுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

காசாவுக்கு அப்பால் பதற்றம்

இதேவேளை, காசாவில் உள்ள மருத்துவமனை மீது கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டது மற்றும் காசா மீதான இஸ்ரேலின் தரைவழி தாக்குலுக்கான திட்டங்கள் காரணமாக அரபுலகம் பெரும் பதற்றத்தை சந்தித்திருப்பதோடு இந்தப் போர் காசாவை தாண்டி தீவிரம் அடையும் அச்சம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

ஈரான் ஆதரவு லெபனான் அமைப்பான ஹிஸ்புல்லா மனாரா கிராமத்தில் இஸ்ரேலிய நிலைகள் மீது ரொக்கெட் குண்டு தாக்குதல்களை நடத்தியுள்ளது. பதில் நடவடிக்கையாக இஸ்ரேல் பீரங்கி தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதாக லெபனான் பாதுகாப்பு வட்டாரம் மற்றும் ஐ.நா அமைதிகாக்கும் படையை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இஸ்ரேலிய படை மற்றும் ஹிஸ்புல்ல பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் தெற்கு லெபனான் எல்லை பகுதியில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக லெபனான் இராணுவம் தெரிவித்தது.

இந்த பரஸ்பர தாக்குதலுக்கு இடையே ஏழு ஊடகவியலாளர்கள் சிக்கிய நிலையில் தம்மை மீட்கும்படி அவர்கள் ஐ.நா அமைதிகாக்கும் படையை கேட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. தெற்கு லெபனானில் கடந்த வாரம் ரோட்டர்ஸ் செய்தியாளர் இஸ்ஸா அப்தல்லா கொல்லப்பட்டதோடு மற்ற ஊடகவியலாளர்கள் காயமடைந்தனர். லெபனான் எல்லைக்கு அருகில் இருக்கும் வடக்கு நகரான கிரியா ஷமோனாவின் குடியிருப்பாளர்களை இஸ்ரேல் நேற்று அப்புறப்படுத்தியது. இந்த சிறு நகரில் 20,000 பேர் வசித்து வந்தனர்.

மேற்குக் கரையிலும் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டங்கள் வலுத்து வருகின்றன. இது இந்த போரில் இஸ்ரேல் – காசா மற்றும் இஸ்ரேல் – ஹிஸ்புல்லாவுக்கு அப்பால் மூன்றாவது முனை போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்குக் கரை நகரான துல்கர்மாவில் உள்ள நூர் ஷம்ஸ் அகதி முகாமில் இஸ்ரேலிய படைகளுடனான மோதலில் 13 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் மேற்குக் கரையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளது. தவிர, இஸ்ரேலிய படை அங்கு நடத்தும் சுற்றிவளைப்புகளில் நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## யெமனில் இருந்து வீசப்பட்ட ஏவுகணைகள் இடைமறிப்பு



**இஸ்ரேலை நோக்கி செலுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்களால் நடத்தப்பட்ட ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை செங்கடலில் இருக்கும் அமெரிக்க கடற்படை கப்பல் ஒன்று இடைமறித்துள்ளது.**

**தரையை தாக்கும் மூன்று க்ரூஸ் ஏவுகணைகள் மற்றும் பல ஆளில்லா விமானங்கள் இடைமறித்து அழிக்கப்பட்டன என்று அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகனின் பேச்சாளர் பிரிகேடியர் ஜெனரல் பட் ரைடர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதல் யெமனின் ஹூத்தி படைகளால் நடத்தப்பட்டிருப்பதோடு இஸ்ரேலை நோக்கியதாக இருக்கக் கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.**

**இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையிலான போரை அடுத்து பிராந்தியத்திற்கு அனுப்பப்பட்ட போர் கப்பல்களில் ஒன்றான யு.எஸ்.எஸ். கார்னி செங்கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு இடைமறிக்கப்பட்ட ஏவுகணைகள் திறந்த நீர்ப்பகுதியில் விழுந்ததாகவும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் ரைடர் தெரிவித்தார்.**

**காசா போர் பிராந்தியத்திற்கு பரவும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே இரு விமானம்தாங்கி கப்பல்கள் உட்பட போர் கப்பல்களை இஸ்ரேலுக்கு அருகில் அமெரிக்க நிலைநிறுத்தியது. தவிர, 2,000 துருப்புகளை தயார்நிலையில் வைப்பதற்கும் அமெரிக்கா நடவடிக்கை எடுத்தது.**

## ஹமாஸ் அமைப்பின் இருவர் இஸ்ரேலின் முக்கிய இலக்கு



காசா மீதான தரைவழி தாக்குதலின்போது ஹமாஸ் படையின் அனைத்து உறுப்பினர்களும் கொல்லப்படுவார்கள் என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது. இதில் ஹமாஸ் ஆயுதப் பிரிவைச் சேர்ந்த முஹமது தெயிப் மற்றும் அரசியல் பிரிவு தலைவர் யெஹ்யா சின்வார் ஆகியோர் பிரதான இலக்குகளாக இஸ்ரேல் கருதுகிறது.

"ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு இரண்டு தேர்வே உள்ளன. ஒன்று சரணடைவது அல்லது கொல்லப்படுவதாகும். இதில் மூன்றாவது தேர்வில்லை" என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் எச்சரித்துள்ளார்.



எனினும் இந்த எச்சரிக்கைகளுக்கு பலஸ்தீன போராளிகள் பயப்படப்போவதில்லை என்று ஹமாஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தெயிப் மற்றும் சின்வார் இருவரும் ஹமாஸ் போராளிகளால் அமைக்கப்பட்ட சுரங்கப்பாதை வலையமைப்பில் பதுங்கி இருப்பதாக காசாவுக்கு வெளியில் இருக்கும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும் இவர்கள் இருவரும் தலைமறைவாக இருந்து தமது நடவடிக்கைகளை பல ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்றனர்.

1987 இல் ஹமாஸின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராக இருக்கும் சின்வார் அந்த அமைப்புக்குள் பல நிலைகளில் இருந்து முன்னேறி வந்தவராவார். காசா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர் 23 ஆண்டுகள் இஸ்ரேலிய சிறையில் இருந்தபோது ஹீப்ரு மொழியை கற்றார்.

இரண்டு இஸ்ரேலியர்களை கொன்றதற்காக நான்கு ஆயுள் தண்டனைகள் விதிக்கப்பட்ட சின்வார் பிரெஞ்ச் இஸ்ரேல் வீரரான கிளாட் ஷலிட்டுக்கு பகரமாக 2011 ஆம் ஆண்டு 1,100 பலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டபோது மூத்த உறுப்பினராக விடுதலை பெற்றார்.

காசாவில் உள்ள கான் யூனிஸ் அகதி முகாமில் பிறந்தவர்களான சின்வார் மற்றும் தெயிப் இருவரும் அமெரிக்காவால் தேடப்படும் பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ளனர். ஹமாஸ் அமைப்பு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலின் முதல் எதிரியாகப் பார்க்கப்படும் தெயிப் தொடர்பில் பெரிய அளவில் வெளியுலகுக்கு தெரியவில்லை. ஹமாஸின் அரசியல் பிரிவான இஸ்ஸதீன் அல் கஸ்ஸாம் படைப்பிரிவின் தலைவரான அவரின் முழு முகத்தையும் காண்பிக்கும் ஒரே ஒரு புகைப்படமே காணப்படுகிறது. அந்த புகைப்படம் குறைந்தது 20 ஆண்டுகள் பழமையானதாகும். மற்றப் புகைப்படங்களில் அவர் முகமூடி அணிந்து அல்லது அடையாளம் காண முடியாத அளவுக்கு நிழல் படும் வகையில் நின்றபடியே காணப்படுகின்றன.

இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய அன்று தெயிபின் ஓடியோ செய்தியை ஹமாஸின் ஊடகப் பிரிவு வெளியிட்டிருந்தது. "எமது மக்களினதும் தேசத்தினதும் கோபம் வெடித்துவிட்டது" என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.


1965 ஆம் ஆண்டு பிறந்த தெயிபின் மனைவி மற்றும் ஒரு குழந்தை 2014 காசா போரின்போது இஸ்ரேலின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டனர். தெயிப் தனது ஒரு கண்ணை இழந்திருப்பதாகவும் உடல் பாதிப்புக்கு உள்ளான நிலையில் இருப்பதாகவும் கூறப்பட்டபோதும் அவர் செல்வாக்கு மிக்கவராக தொடந்து இருந்து வருகிறார்.

2000 ஆம் ஆண்டு இரண்டாவது இன்திபாதா போராட்டத்தின்போது தெயிப் கைது செய்யப்பட்டபோதும் சிறையில் இருந்து தப்பித்துள்ளார். 2002இல் அவர் ஹமாஸ் ஆயுதப் பிரிவின் தலைவரானார்.

ஒக்டோபர் 7 தாக்குதலுக்கு பின்னர் இஸ்ரேல் ஹமாஸ் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து மரண எச்சரிக்கை விடுத்து வருகிறது. "ஹமாஸின் ஒவ்வொரு உறுப்பினர்களும் கொல்லப்படுவார்கள்" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

## சீனாவுடன் இறப்பர், அரிசி உடன்படிக்கை;

# இலங்கை வழங்கிய ஆதரவை சீன மக்கள் மறக்கமாட்டார்கள்



## ஜனாதிபதியிடம் சீன துணைப் பிரதமர் நன்றி தெரிவிப்பு

சீன மக்கள் குடியரசுடன் இறப்பர், அரிசி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் மூலம் இலங்கை தமக்கு வழங்கிய ஆதரவை சீன மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்களென்பதுடன், இலங்கைக்கு சீனா தனது ஆதரவை எப்போதும் வழங்குமெனவும், சீன துணைப் பிரதமர் Ding Xuxiang தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீன துணைப் பிரதமருக்கும் இடையில் நேற்று முன்தினம் (19) பீஜிங் நகரில் நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின் போதே, சீன துணைப் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

'பெல்ட் அண்ட் ரோட்' முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்த சீன துணைப் பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இரண்டு திட்டங்களும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்படுமெனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, சீனா – இலங்கைக்கு இடையிலான இறப்பர் மற்றும் அரிசி ஒப்பந்தம் இலங்கை செய்து கொண்ட முதலாவது வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கையென்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளினதும் பொதுவான கொள்கைகளுக்கமைய புதிய வர்த்தக உறவுகளை மேம்படுத்த வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது, சீனா வழங்கிய ஆதரவை பெரிதும் பாராட்டிய ஜனாதிபதி, இலங்கை சீனா நட்புறவு கடந்த காலத்திலிருந்து வலுவான மட்டத்தில் இருந்ததாகவும் சீன ஜனாதிபதி ஜீ ஜின் பிங்கின் கீழ் அது மேலும் வலுவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்துசமுத்திர பிராந்தியத்தின் அடையாளத்தையும் அமைதியையும் பாதுகாப்பதில் இலங்கை மிகுந்த கவனம் செலுத்துவதாகவும் இந்துசமுத்திரம், அதிகாரப் போட்டிக்கு பலியாவதற்கு இடமளிக்கக்கூடாதெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

06

### அரசியலமைப்பு பேரவை செயற்பாடுகளை

# ஒருபோதும் குறைத்து நான் மதிப்பிடவில்லை

## நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகளை தான் ஒருபோதும் குறைத்து மதிப்பிடவில்லையென்பதுடன், பேரவையின் உறுப்பினர்களை அவமதிக்கவுமில்லையெனவும், நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஒருசில நியமனங்கள் தாமதப்படுத்தப்பட்டுள்ளமைக்கே அதிருப்தி தெரிவித்ததாக தெரிவித்த அவர், எந்தவிதத்திலும் அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகளை குறைத்து மதிப்பிடவில்லையெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முறையாக செயற்படாத காரணத்தாலேயே பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

ஊழல் எதிர்ப்பு சட்டத்துக்கமைய இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதை தொடர்ந்து தாம் வலியுறுத்துவதாகவும், அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர், "அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தினூடாக அரசியலமைப்பு பேரவையின் அதிகாரங்களை பலப்படுத்த நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன். அரசியலமைப்பு பேரவையின் 41 (அ) உறுப்புரையின்படி அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

06

# காஸா மோதலை ஒருபோதும் புலிகளுடன் ஒப்பிட முடியாது

## முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டிலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாதொழித்த போதும், புலம்பெயர் தமிழர் அமைப்புகள் இன்றும் சர்வதேச ரீதியில் தனி நாட்டுக் கனவுடன் செயற்படுவதாக, முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

புலம்பெயர் அமைப்புகள் தற்போது இஸ்ரேலுக்கு சார்பாக செயற்படுவதாகத் தெரிவித்த அவர், புகலிடக் கோரிக்கைக்காக சுயகௌரவத்தை விட்டுக்கொடுத்து, அந்த அமைப்புகள் செயற்படுவதாகவும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இஸ்ரேல் பலஸ்தீன மோதலின் உலகளாவிய பாதிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"இஸ்ரேல் பலஸ்தீன மோதலில் சிதறிக் கிடக்கும் மனித உடல்கள், பச்சிளம் குழந்தைகளின் அழு குரல்கள், மரண ஓலங்கள் கவலையளிக்கின்றன.

இலங்கையில் 30 வருடகால பயங்கரவாத யுத்த சூழலில் வாழ்ந்த எமக்கு, யுத்தத்தின் கொடுமைகள் மறக்க முடியாத வடுக்களாகியுள்ளன. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக அப்பாவி மக்களை படுகொலை செய்வது பயங்கரவாதமென்று வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

இஸ்ரேல் காஸா மோதலை இலங்கை இராணுவம், விடுதலைப் புலிகளுக்கு இடையிலான மோதலுடன் தொடர்புபடுத்தி இந்திய ஊடகங்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளதை காண முடிகிறது.

இராணுவத்தினர் பாரிய அச்சுறுத்தலுக்கு மத்தியில் 2 இலட்சத்து 95 ஆயிரம் தமிழர்களை

06

# யுத்தத்தால் துன்பப்படுவோர் எவராயினும் ஒற்றுமையுடன் நாம் குரல் கொடுப்போம்

## TNA பேச்சாளர் சுமந்திரன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



யுத்தத்தில் துன்பப்படும் மக்கள் எவராக இருந்தாலும், நாம் அனைவரும் ஒற்றுமையுடன் அவர்களுக்காக குரல் கொடுப்பது அவசியமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இஸ்ரேல் பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த விவாதத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"பலஸ்தீன பகுதிகளில் இடம்பெறும் கொலைகளுக்கான எமது கண்டனங்களை நாம் தெரிவித்துக்கொள்கின்றோம். அங்கு பாரியளவில் மனித அவலங்கள் இடம்பெற்று வருகின்றன. அது ஒரு சிறிய நாடாக இருந்தாலும், நாம் ஒன்றும் தெரியாதது போன்று நடுநிலையாக இருந்துவிட முடியாது. இரு தரப்பின் நியாயங்கள், அநியாயங்கள் தொடர்பாக கதைப்பதற்கான நேரம் இதுவல்ல. வன்முறைகளை எதிர்க்க வேண்டும். இரு தரப்பினரும் யுத்தத்தை நிறுத்தி, மனித அவலங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே எமது வேண்டுகோள். நீண்டகாலமாக நாமும் இவ்வாறான வன்முறைகளில் பாதிக்கப்பட்டுள்ளோம். இதற்கு யார் பொறுப்பாளிகள்? அத்துமீறியவர்களையே நாம் இனங்கான வேண்டும். நாடுகள் வன்முறைகளின் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முயல்கின்றன. இக்காலத்தில் அதற்கு இடமளிக்க முடியுமா? பேச்சுவார்த்தைகள், மத்தியஸ்தம் வகித்தல் மூலம் அதற்கான தீர்வுகளைக் காணலாம். உலகில் பல பகுதிகளிலும் மோதல்கள் இடம்பெறுகின்றன. மத்திய கிழக்கில் இடம்பெறும் பாதிப்புகள் மற்றும் தாக்கங்களை நாம் மூன்று தசாப்தங்களாக அனுபவித்து வந்துள்ளோம். வைத்தியசாலைகள்மீதுதாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கில் யுத்தத்தின் போது, புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதென்பதுடன், காஸாவில் வைத்தியசாலைகள் மீதான தாக்குதலை கண்டிப்பவர்கள் இங்கே வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பாக எவரும் குரல் எழுப்பவில்லை" எனத் தெரிவித்தார்.

# இலஞ்சம் பெற்ற இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உறுப்பினர்

## பாராளுமன்றில் அமைச்சர் விஜேயதாச குற்றச்சாட்டு

புதிதாக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊழல் ஒழிப்பு சட்டமூலத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் இலஞ்சம் பெற்றுள்ளதாக, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

"ஊழல் தடுப்பு சட்டமூலத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் இலஞ்சம் வந்துள்ளது" எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்க அரசியலமைப்பு பேரவை தவறிவிட்டதாக சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பாக சபாநாயகர் வழங்கிய தீர்ப்புக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "இலஞ்ச ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியலமைப்பு சபைக்கு கடிதம் எழுதி, சபையின் பத்து உறுப்பினர்களையும் அச்சுறுத்தியுள்ளனர். இலஞ்ச ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எவ்வாறு அரசியலமைப்பு சபையை அச்சுறுத்த முடியும்" என அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

அரசியலமைப்பு சபையை அவமதிக்கும் நோக்கம் எமக்கு இல்லையெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

### உத்தேச காலநிலை மாற்றம்

## சர்வதேச பல்கலையின் கற்பித்தல், தொழில்நுட்ப பிரிவுகளுக்கு ஒத்துழைக்க சீன நிறுவனங்கள் விருப்பம்

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகமொன்றை நிறுவும் இலங்கையின் யோசனைக்கமைய அதன் கற்பித்தல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளுக்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கு சீன நிறுவனங்கள் பலவற்றின் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீனாவின் சுற்றாடல் பல்கலைக்கழகம், காலநிலை தொடர்பான முகவர் நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (19) பீஜிங் நகரில் நடைபெற்றது.

இதன்போது, காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக் கழகத்தை நிறுவும் இலங்கையின் யோசனை மிகவும் காலோசிதமானதாகவும் தூரநோக்குடையதாகவும் உள்ளதாக, பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பாக பங்குதாரர்கள் பலருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் இது இலங்கையின் தனி முயற்சியாக மாத்திரமின்றி, கூட்டு முயற்சியாக செயற்படுத்துவதே தமது எதிர்பார்ப்பாகுமெனவும் தெரிவித்தார்.

இதற்காக மேற்படி பல்கலைக்கழகம் தொடர்பாக ஏனைய பங்குதாரர்களுடன் நிகழ்நிலை மூலம் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்த ஏற்பாடு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### இஸ்ரேல் - பலஸ்தீன மோதலினால்

# பாரதூரமான விளைவுகளை தடுக்க பிரிக்ஸ் நாடுகள் தலையிட வேண்டும்

## முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இஸ்ரேல் பலஸ்தீன மோதல் காரணமாக உலகம் பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்வதை தடுப்பதற்கு பிரிக்ஸ் அமைப்பு நாடுகள் இந்த விடயத்தில் தலையிடுவது அவசியமென, முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இஸ்ரேல் பலஸ்தீன மோதலை தோற்றுவித்த அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் முன்னிலை வகிக்கும் வரை இந்தப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாதெனவும், அவர் தெரிவித்தார்.

பலஸ்தீன இஸ்ரேல் மோதலில் சில பலம் வாய்ந்த நாடுகள் ஒருதலைப் பட்சமாக செயற்படுவதால், மூன்றாம் உலக மகா யுத்தம் உருவாகும் சூழல் காணப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இஸ்ரேல் ஹமாஸ் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### பாகிஸ்தான், நேபாளம், கியூபாவுக்கு

# ஓய்வுபெற்ற படையதிகாரிகள் மூவர் தூதுவர்களாக நியமனம்

## உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி

புதிய உயர்ஸ்தானிகர்கள் இருவர் மற்றும் தூதுவர் ஒருவரின் நியமனத்துக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டதாக, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். இதற்கமைய பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக அட்மிரல் (ஓய்வுபெற்ற) ரவீந்திர சந்திரசிறி விஜேகுணரத்னவை நியமிப்பதற்கும் கியூபா குடியரசின் இலங்கை உயர்ஸ்தானிகராக அட்மிரல் (ஓய்வுபெற்ற) தமித் நிஷாந்த சிறிசோம உலுகேதன்னவை நியமிப்பதற்கும் உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, நேபாளத்துக்கான இலங்கைத் தூதுவராக ஏயார் சீப் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சுதர்ஷன கரகொட பத்திரணவை நியமிப்பதற்கும் பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டதாகவும், செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் உயர் பதவிகள் பற்றிய குழு அண்மையில் (19)




பாராளுமன்றத்தில் கூடியதுடன், இதில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக, பாராளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரல, உதய கம்மன்பில மற்றும் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கொழும்பின் சில பகுதிகளில் இன்று நீர்வெட்டு அமுல்

கொழும்பின் சில முக்கிய பகுதிகளில் இன்று (21) முதல் 15 மணிநேர நீர்வெட்டு அமுல்படுத்தப்படுவதாக, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது. கொழும்பு 11, 12, 13, 14, 15 ஆகிய பகுதிகளிலேயே நீர்வெட்டு அமுல்படுத்தப்படுவதாகவும், அச்சபை தெரிவித்தது.

இந்நிலையில், இன்று (21) மாலை 5.00 மணி முதல் நாளை (22) காலை 8.00 மணிவரை நீர்வெட்டு அமுல்படுத்தப்படுவதாக தெரிவித்த தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாகவே நீர்வெட்டு அமுல்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தது.



### டுபாயில் தலைமறைவாகியுள்ள 'மன்னா ரமேஷ்'

# இன்டர்போல் ஊடாக சிகப்பு பிடியாணை பெற CID தீர்மானம்

போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொலைகள் உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவரான மன்னா ரமேஷை கைது செய்ய சர்வதேச பொலிஸ் மூலம் சிவப்பு பிடியாணை பெற பொலிஸார் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதற்கமைய அவரைக் கைது செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை பிரதேசத்தில் பொலிஸ் உயர் அதிகாரிகளை அச்சுறுத்தியமை கொலை, கப்பம், போதைப்பொருள் கடத்தல் போன்ற பாரிய குற்றச்செயல்களில் மன்னா ரமேஷ் எனும் பாதாள உலக தலைவர் ஈடுபட்டமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தற்போது டுபாயில் மன்னா ரமேஷ் தலைமறைவாகி, இவ்வாறான குற்றச்செயல்களை வழிநடத்துவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரமேஷின் கொலை, கப்பம், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல குற்றச்செயல்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் ஆதாரங்களையும் பெற்று, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மூலம் சர்வதேச பொலிஸாருக்கு அனுப்பும் பணியை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 04ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 05

### குறள் தரும் சிந்தனை



பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்

வருந்தக் கூடிய செயலை நண்பர்கள் செய்தால் அது அறியாமையினாலோ அல்லது உரிமையின் காரணமாகவோ செய்யப்பட்டது என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

# இலவசக் கல்வியின் எதிர்காலம் மீது தோன்றும் அவநம்பிக்கை!

இலங்கையில் புதிதுபுதிதாக பல்கலைக்கழகங்கள் முளைவிடுகின்றன. அவை அத்தனையும் தனியார் பல்கலைக்கழகங்கள் ஆகும். வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றுடன் இணைக்கப்பட்டதாக இப்பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. கொழும்பு மற்றும் அதனை அண்டிய பெருநகரப்பகுதிகளிலேயே இப்பல்கலைக்கழகங்கள் அதிகளவில் அமைக்கப்பட்டுள்ளன.

தனியார் பல்கலைக்கழகங்களில் பெருமளவான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களில் அதிகமானவர்கள் செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களாவர். பணவசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களிலும் சிறிய தொகையினர் தனியார் பல்கலைக்கழகங்களில் கற்று வருகின்றனர். நடுத்தர வசதியுள்ள பெற்றோர் தங்கள் வசமுள்ள காணிகளை விற்றாவது தமது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் தனியார் பல்கலைக்கழகங்களில் சேர்த்து விடுகின்றனர்.

தனியார் பல்கலைக்கழகங்களில் கற்று பட்டம் பெற்று வெளியேறுகின்ற மாணவர்களுக்கு அரசாங்க நிறுவனங்களில் தொழில்வாய்ப்புக் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் இருப்பதில்லை. ஆனால் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்ற சில நிறுவனங்களில் அவர்களுக்கு தொழில்வாய்ப்புக் கிடைப்பதற்கு இடமுண்டு. அதுமாத்திரமன்றி, தனியார் நிறுவனங்களில் தொழில் பெறுவதற்கான வாய்ப்பும் இருக்கின்றது.

ஆனால் இங்கே மற்றொரு சிக்கலும் உருவாகுவதற்கு இடமிருக்கின்றது. தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறுகின்ற மாணவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு செல்லுமானால், அவர்கள் அத்தனை பேரையும் உள்வாங்கிக் கொள்வதற்கு இலங்கையில் தனியார் நிறுவனங்கள் கிடையாது. தனியார் தொழில்நிறுவனங்களைப் பொறுத்தவரை எமது நாடு இன்னுமே குறிப்பிடும்படியான முன்னேற்றம் அடையவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆகவே தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறுகின்ற மாணவர்களின் தொழில் வாய்ப்பென்பது எதிர்காலத்தில் சிக்கலானதாகவே மாறப் போகின்றதென்பதுதான் உண்மை. ஆனாலும் இந்த மாணவர்களுக்கு மற்றொரு சிறந்த எதிர்காலம் உண்டென்பதையும் மறுப்பதற்கில்லை.

தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கான சந்தர்ப்பம் இன்னும் குறையாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வெளிநாடுகளைப் பொறுத்தவரையில் அரசாங்க நிறுவனங்களைப் பார்க்கிலும், தனியார் நிறுவனங்களே அதிக வினைத்திறனுடன் இயங்கி வருகின்றன. அந்நிறுவனங்களைப் பொறுத்தவரை அரசாங்கப் பல்கலைக்கழகமா அல்லது தனியார் பல்கலைக்கழகமா என்பது முக்கியமல்ல.

பட்டம் பெற்றுள்ள மாணவர்களின் ஆற்றலும் வினைத்திறனுமே அந்நிறுவனங்களுக்கு அவசியமாகின்றன. தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்கள் பலர் வெளிநாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்கள் பலவற்றில் அதிக வேதனத்தில் தொழில் புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொகை நாளும் பொழுதும் பல்கிப்பெருகி வருகின்றது. க. பொ. த உயர்தரம் சித்தியடைகின்ற மாணவர்களில் அத்தனை பேரையும் உள்வாங்கிக் கொள்வதற்கு இலங்கையிலுள்ள அரசாங்க பல்கலைக்கழகங்களில் இடம் கிடையாது. க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தோரில் அரசாங்க பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களின் நிலைமை உண்மையிலேயே பரிதாபமானது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவோரில் பலர் சிறிதளவே குறைவான சித்தியுடன் அரசாங்க பல்கலைக்கழக வாய்ப்பைத் தவறவிடுகின்றனர். இவர்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாகின்றனர். அவர்களில் பலர் மனவிரக்தியினால் பல்கலைக்கழகக் கனவைத் துறந்துவிட்டு தொழில் வாய்ப்பைத் தேடிச் செல்கின்றனர். மேலும் சிலர் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொள்கின்றனர்.

பணவசதி உள்ளோர் தனியார் பல்கலைக்கழகங்களை நாடுகின்றனர். இன்றைய நவீன உலகின் தொழில்சந்தையைக் கண்டறிந்து, அதற்கான பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இவர்களால் முடிகின்றது. நான்கு வருடகால கற்கைநெறிக்காக அவர்கள் பில்லியன்கணக்கான ரூபா பணத்தைச் செலவிட வேண்டியிருக்கின்றது. உயர்கல்வி கற்று உயர்தொழில் புரிய வேண்டுமானால் பணத்தைச் செலவிடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை என்பதுதான் உண்மை.

இவற்றையெல்லாம் வைத்து நோக்குகின்ற போது, கல்வி என்பது இக்காலத்தில் பணமயமாக்கப்பட்டு விட்டதாகவே கருத முடிகின்றது. இலவசக்கல்வியானது அருகிச் செல்வதாகவும், பணம் செலுத்திக் கற்கும் கலாசாரம் உயர்ந்து செல்வதாகவும் கருதுவதற்கு இடமுண்டு. அவ்வாறானால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் எதிர்காலம் என்ன என்ன வினா இங்கே எழுகின்றது. இது பரிதாபமான விடயம் ஆகும்.

பல்கலைக்கழகக் கல்வி மாத்திரமன்றி, பாடசாலைக் கல்வியின் நிலைமையும் இவ்வாறுதான் சென்று கொண்டிருக்கின்றது. பாடசாலையில் கற்கின்ற அத்தனை மாணவர்களும் ரியூஷன் கல்வியை நாட வேண்டியிருக்கின்றது என்றால் அதன் அர்த்தம் யாது? பரீட்சையை எதிர்கொள்வதற்கும், திறமையை அதிகரித்துக் கொள்வதற்கும் பாடசாலைக் கல்வி போதாதென்பதற்காகத்தானே மாணவர்கள் ரியூஷன் கல்வியை நாடுகின்றார்கள்?

இந்த விடயம் பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் நன்றாகவே புரிந்திருக்கின்றது. ஆனால் அரசாங்க பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு இவ்விடயம் புரிந்திருக்கின்றதோ என்பதுதான் தெரியவில்லை!

editor.tkn@lakehouse.lk

# மாத்தளை வெள்ளைக்கல் அருள்மிகு அழகர் பெருமாள் கோவில் கும்பாபிஷேக பெருவிழா

புராதன தொன்மையும் வரலாற்றுச் சிறப்புமிக்க சுமார் 200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மாத்தளை வெள்ளக்கல் அருள்மிகு அழகர் பெருமான் திருக்கோவில் புனராவர்த்தன அஸ்தபந்தன பஞ்சகுண்டபக் ஷ திருக்குடமிளக்கு பெருசாந்தி விழாவின் பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் 25ம் திகதி புதன்கிழமை (25/10/2023) ஆரம்பமாகும்.

25/10/2023 காலை 8.00க்கு விஸ்பம் சேன கணபதி பூஜை வழிபாடு, புண்ணியாக ஜெபம், பேரித்தாடனம் தேவ பிராமண அனுஞ்ஞை, முகூர்த்த படலம், தன பூஜை , திரவிய சுத்தி, திரவியாகம் , கணபதி ஹோமம், மகாலட்சுமி ஹோமம், கங்கா தீர்த்த சங்கீரனம், சூரியாகிணி சங்கீரணம்ஆகிய புனித கிரியைகள் நடைபெற்று விபூதி பிரசாதம் வழங்கப்படும்.

பிற்பகல் 3 மணிக்கு விநாயகர் வழிபாடு புண்ணியாக ஜெபம் வாஸ்து சாந்தி, கிராம சாந்தி, பிரவேச பலி, விஷ்வஸ் சேன கணபதி பூஜை, துளசி தாமோதர பூஜை, சத்திய நாராயண பூஜை, மூர்த்திகள் பூர்வாங்க கிரியைகள், சமுத்திர ராஜ பூஜை, ரஷ்ஹோமம், கோவாசம் ,நித்திய துவஜ ரோகனம் ,ஹலா ஹர்ஷணம், சனா ஹோமம் ,கட ஸ்தாபனம் களா ஹோமம் ,தீப ஸ்தாபனம், யத்ரஸ்தாபனம், பிரமஸ்தாபனம் ,யாகசாலை பிரவேசம் ,பஞ்சாகினி விபாஜனம் ,விபூதி பிரசாதம் வழங்கல் நடைபெறும்.

26/10/2023 வியாழக்கிழமை எண்ணெய்க் காப்பு நடைபெறும். காலை 8:00 மணிக்கு மகாகணபதி வழிபாடு, புண்ணியாக ஜெபம், தைலா பியாங்கம், யாகசாலை பிரவேஷம் ,யாக பூஜை பஞ்சாங்கனி பூஜை, ஸ்தாலியாகம் ,சுதர்சன சக்கர யோகம், திரவிய ஹோமம், தீபாராதனை ,பிரதட்ஷணம், திருவாய்மொழி பாராயணம் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு புண்ணியாக ஜெபம், பஞ்சாமிர்த பூஜை, பிரம்மகத்தி பூஜை, பிம்பரஷபத்தனம், கர்ப்ப துவார பூஜை, யாக பூஜை நந்வாயுவன, வர்ண மந்தர கலாபச நியாசம், பஞ்சாகினி பூஜை, நாராயண ஹோமம், பூர்வ சந்தானம், பஞ்சிம சந்தானம்,



பூர்ணாகுதி, பிரதட்சணம், சதுர் வேதாரணியம், திருமொழி பாராயணம், குருமார் வஸ்திர ஊத்தரியம் வழங்கல் நடைபெறும்.

27/10/2023 வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறும். காலை 5:00 மணிக்கு விஷ்வம்ஸ் சேன கணபதி பூஜை, புண்ணியாக ஜெபம், யாகசாலை பிரவேசம், யாக பூஜை, பஞ்சாங்கனி பூஜை ,விசேட ஹோமம், உபசார ஹோமம், ஜெயாதி ஹோமம், மஹா பூர்ணாகுதி, விசேட தீபாராதனை, பிரதிஷ்டனம், சதுர் வேத கோஷம், திருவாய்மொழி பாராயணம் ,கீத வாத்தியம், சர்வாஞ்சலி, ஆசீர்வாதம், அந்தர்பலி, பகிர் பலி, யாத்ரா தானம், கும்ப உற்சவம் நடைபெறும். சுபமுகூர்த்தத்தில் மங்கள கோஷங்கள் முழங்க ஸ்ரீதேவி, பூமாதேவி, சமேதஸ்ரீ அழகர் பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் தச தரிசனம், எஜமான் அபிஷேகம், ஸ்திராகுதி, ரக்ஷா விசர்ஜனம் ,மகா அபிஷேகம் நடைபெறும்.

ஆலய பிரதம குரு தமிழ்நாடு கும்பகோணம் பெரியார் மடம் சீர்வளர்சீர் சிவ பொன்முடி முருகானந்த தேசிக சுவாமிகள் தலைமையில் மற்றும் கிரியா ஜோதி பிரம்மஸ்ரீ முத்து பாலச்சந்திர குருக்கள், ஆகம கிரியாரத்தினம் பிரம்மஸ்ரீ குமார நந்தகுமார குருக்கள் ,சிவஸ்ரீ திலகேஸ்வர குருக்கள், சிவஸ்ரீ கணேச திரு நீலகண்ட குருக்கள், சிவஸ்ரீ சாமி மகேஸ்வர குருக்கள், சிவஸ்ரீ க. கார்த்திகேய குருக்கள்,சிவஸ்ரீ வே. விபுலானந்த குருக்கள் ,சிவஸ்ரீ தோ மிதுஹா சர்மா, சிவஸ்ரீ ச பிரபு சர்மா, சிவஸ்ரீ பி சுதர்சன சர்மா, சிவஸ்ரீ .கமலதாச சர்மா, சிவஸ்ரீ நிசாந்தன் சர்மா ஆகியோர் இணைந்து புசல்லாவ புவநேந்திர குழுவினர் மங்கல இசை வழங்க கிரிகைகளை நடத்துகின்றனர்.

வெள்ளக்கல் ஆலய கும்பாபிஷேக கிரியைகளில் அடியார்கள் கலந்து கொண்டு பால் பழம், பூமாலை போன்ற பூஜைப் பொருட்களை வழங்கி நாராயண பெருமாளின் திருவருள் கடாட்ஷத்தை பெற்றுக் கொள்ளுமாறு ஆலய அறங்காவால சபை தர்மகர்த்தா மு.சபாபதி ஐயா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆலயத்தினை ஆகம முறைப்படி எல்கடுவ பாலேந்திரன்(கண்ணன்) குழுவினர் மற்றும் உக்குவளை நவரெட்னராஜா குழுவினர்இணைந்து புனருத்தானம் செய்துள்ளனர்.

**எச்.எச். விக்ரமசிங்க...**

# பெரம்பலூர் அருகே பிரம்மரிஷி மலையில் 51 நாட்கள் தொடர் கோமாதா பூஜை

பெரம்பலூர் அருகே எளம்பலூர் பிரம்மஷி மலையடிவாரத்தில் பகவான் காகபுஜண்டர் தலையாட்டி சித்தரின் அருளாசியுடனும், பகவான் அன்னைசித்தர் ராஜகுமார் குருஜியின் அருளாசியுடனும், உலக மக்கள் நலன் கருதி முறையான மழை வேண்டி தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம் உத்திராடம் நட்சத்திரத்தில் பூஜை தொடங்கப்பட்டு தொடர்ந்து 51 நாட்கள் கோமாதா நடைபெறும்.

இவ்வருடம் 28.08.2023 அன்று தொடங்கப்பட்ட 51 நாட்கள் தொடர் கோமாதா பூஜையின் நிறைவு விழா பூஜை அண்மையில் (17.10.2023) நடைபெற்றது.

விழாவில் இயற்கை சீற்றங்களில் இருந்து தர்ம சிந்தனையுடைய மக்கள் எவ்விதமான துன்பங்கள், கஷ்டங்கள் இல்லாமல் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று, அனைத்து விதமான தோஷங்கள் நீங்கி, சகல ஐஸ்வர்யங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ பிரார்த்தனை செய்யப்பட்டது. மழை வேண்டி கோபூஜை நடைபெற்றதும் மழை பொழிந்து இயற்கை ஆசிர்வதித்தது.

தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட வயதான பெண்களுக்கு புடவை தானம் வழங்கப்பட்டு, பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.





விழாவில் ★மாதாஜி ரோகிணி ராஜகுமார், பிரம்மரிஷிமலை தவயோகி சுந்தரமகாலிங்கம் சுவாமிகள், தவயோகி தவசிநாதன் சுவாமிகள், மாதாஜி ராதா, நாகர்கோவில் வள்ளலார் பேரவை மாநில தலைவர் தவத்திரு.சுவாமி பத்மேந்திரா, இலங்கை மகா சித்தர்கள் சபை சிவ. கோபிநாத் சுவாமிகள், சென்னையை சேர்ந்த பிரபல யோக பயிற்சியாளர் ஆசன ஆண்டியப்பன் அவர்களின் பேத்தி திருமதி கோமதி முத்துக்குமார்,

கருங்குழி வில்லிசை வேந்தர் கிஷோர்குமார் மற்றும் மகா சித்தர்கள் டிரஸ்ட் மெய்யன்பர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

கோ மாதா பூஜை தொடர்ந்து சிங்கப்பூர், குரு கடாக்சம், மலேசியா, அமெரிக்கா, இலங்கை, பெங்களூர், தமிழ்நாடு, பெரம்பலூர், எளம்ப



லூர் மெய்யன்பர்கள் பூஜை, தர்ம பங்கேற்போடு சிறப்பாக நடைபெறுகிறது.

# மாத்தளை பெ.வடிவேலனின் ‘வல்லமை தாராயோ’ சிறுகதை நூல் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் வெளியீடு

மலையக சிருஷ்டி இலக்கியத்துறையில் ஆழமாக வேரூன்றி தடம் பதித்துள்ள மாத்தளை பெ.வடிவேலனின் ‘வல்லமை தாராயோ’ சிறுகதை தொகுதியின் அறிமுக விழா கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. கலை ஒளி முத்தையா பிள்ளை நினைவுக் குழு சார்பில் மு. நித்தியானந்தன், எச்.எச்.விக்கிரமசிங்க வெளியிட்டு, தமிழகத்தின் தாய் சஞ்சிகையின் இலங்கை ரூபா ஒரு லட்சம் விருது பெற்ற தொகுதியாகும்.





தமிழ்ச் சங்க மண்டபத்தில் அறிஞர்கள் பலர் ஒன்று கூடி பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் வெளியீட்டு விழா, மங்கள விளக்கேற்றலுடனும், தமிழ்த்தாய் வாழ்த்துடனும் கே.பொன்னுத்துரை அவர்களின் வரவேற்பு உரையுடன் விழா ஆரம்பமாகியது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ், முன்னாள் ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன், இலக்கிய புரவலர் ஹாசிம்உமர், ஈஸ்வரன் பிரதர்ஸ் குருப் நிறுவனங்களின் தலைவர் தெய்வநாயகம் வீரபாகு, உடுவை தில்லை நடராஜா, திருமதி சாந்தி நாவுக்கரசர், டொக்டர் தி. ஞானசேகரம் தம்பதியினர், இந்து சமய திணைக்கள முன்னாள் பணிப்பாளர் க.சண்முகலிங்கம், ஏ.எம்.நஹியா, வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜன், தினகரன் பிரதம ஆசிரியர் தெ.செந்தில்வேலவர், சட்டத்தரணி சோ.சேனாதிராஜா, டொக்டர் சிவலிங்கம் சதிஸ்குமார், டொக்டர் ஸ்ரீமதி கோவிந்தபிள்ளை, ஆன்மீக செம்மல்கள் சு. புண்ணியசீலன், சு.சிவராஜா, தொழிலதிபர் எம் மகேந்திரன், எம். ஜெயசீலன் மற்றும் தமிழக இலக்கிய கர்த்தாவான எஸ். கருணாநிதி ஆகியோர் உட்பட எழுத்தாளர்களும் இலக்கிய அபிமானிகளும் அரங்கில் நிறைந்திருந்தனர்.

நிகழ்வுகளில் கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுக் குழுவின் செயலாளர் எச்.எச் விக்கிரமசிங்க நூலை வெளியிட்டு வைக்க, இலக்கிய புரவலர் ஹாசிம்உமர் பிரதியைப் பெற்றுக் கொண்டார். கடந்த வருடம் இலங்கையில் வெளிவந்த சிறுகதை தொகுதிகளில் தரமான சிறுகதை தொகுதி என மாத்தளை வடிவேலனின் ‘வல்லமை தாராயோ’ தெரிவு செய்யப்பட்டு தமிழ்நாடு டொக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை கல்லூரி முனைவரும், ஷதாய் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான டொக்டர் குமார் ராஜேந்திரன் வழங்கிய ஒரு இலட்சம் இலங்கை ரூபாய் பரிசுத் தொகையை தொழில் அதிபர் ஈஸ்வரன் குருப் நிறுவனங்களின் முகாமைத்துவ பணிப்பாளர் தெய்வநாயகம் வீரவாகு அவர்களும், பதிப்பாசிரியர் எச்.எச்.விக்கிரமசிங்க அவர்களும் மாத்தளை வடிவேலனிடம் வழங்கி சிறப்பித்தார்கள்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் தனது வாழ்த்துரையில் கலைமாமணி, “கலாபூஷனம் மாத்தளை வடிவேலன் நான் இந்து கலாச்சார ராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தில் கலாசார உத்தியோகத்தராக திறமையாகப் பணியாற்றினார். மாத்தளை வடிவேலனைப் பற்றி நினைக்கும் போது அவரது புன்னகை கலந்த முகமே எனது ஞாபகத்திற்கு வருகிறது. தனக்கு கொடுக்கப்பட்டிருந்த கடமைகளை சிறந்த முறையில் மிகுந்த நட்புறவோடு எதையும் சாதிக்கும் திறமை உள்ளவராக விளங்கினார்.

கடந்த ஐந்து தசாப்த காலமாக எழுதிவரும் அவர், இலக்கிய ஈடுபாடு கொண்டவராக மலையக சிறுகதை துறையில் ஏற்கனவே தடம் பதித்திருந்தார். மேலும் 'வல்லமை தாராயோ' என்ற தலைப்பில் அவர் எழுதியிருக்கும் சிறுகதை தொகுப்பு நம் சிந்தனைகளை தூண்டுவதாக உள்ளது.

லண்டனில் வாழும் எழுத்தாளர் இலக்கியச் செம்மல் பேராசான் மு. நித்தியானந்தன் மற்றும் மலையக இலக்கிய வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு வரும் எச் எச் விக்கிரமசிங்க ஆகியோரது பெரும் முயற்சியுடன் இந்த சிறுகதை தொகுப்பு வெளிவந்துள்ளது. மலையக இலக்கிய வளர்ச்சியிலே ஈடுபாடு கொண்டுள்ள அனைவரும் நித்தி, விக்கி அவர்களின் அற்புதமான பணியை என்றுமே மறக்க மாட்டார்கள்” என்று தெரிவித்தார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய எச்.எச்.விக்கிரமசிங்க நூல்வெளியீட்டிலுள்ள சிரமங்களையும், அதன் வடிவமைப்பதிலுள்ள பிரச்சினைகளையும், எழுத்துப் பிழைகளை திருத்துவதிலுள்ள சிரமங்களையும் எடுத்துக் கூறினார். வெளியீட்டு முயற்சிகளுக்கு பக்கபலமாக உதவும் பெருமகன் குமார் இராஜேந்திரன் அவர்களுக்கும் வடிவேலனின் தொகுதி வெளிவர அனுசரணை வழங்கிய, கனடா பெரியசாமி பாலேந்திரா, லண்டன் பொன் இரத்தினபாலன், அட்டைப்படத்தை வழங்கி உதவிய கே.கே. ராஜா அவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்ததோடு, பேராசன் மு.நித்தியானந்தன் அவர்களின் துணையுடனும் வழிகாட்டலுடனும் வெளியிட்ட நூல்களின் சிறப்பினை விளக்கி கூறினார்.

'அடுத்த வருடம் 2024 ஜனவரி மாதத்தில் சென்னையில் நடைபெறவிருக்கும் புத்தகக் கண்காட்சியில் மலையக எழுத்தாளர்களின் பல நூல்கள் வெளியிடப்பட இருப்பதாக அவர் பதிவுசெய்தார்.





எச்.எச்.விக்கிரமசிங்க அவர்கள் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரான சாலிய குணவர்த்தன ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்தில் மொழிபெயர்த்த பத்து சிறுகதைகளையும், சிங்கள எழுத்தாளர்கள் எழுதிய நான்கு சிறுகதைகளையும் மாத்தளை மலரன்பன் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். அக்கதைகளை தொகுத்து ‘கொலுஷா’ பிறமொழி சிறுகதைகள் என்று வெளியிட இருக்கின்றோம். மலையகத்தின் முன்னோடி சிந்தனையாளரும் உயர்ந்த கல்விமானுமாகிய பீ. மரியதாஸ் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பை 'மலையகம் 200 இங்கிருந்து எங்கே' என்று வெளியிட இருக்கின்றோம். மேலும் தெளிவத்தை ஜோசப் அவர்கள் வாழும் காலத்திலேயே அவர்களின் சிறுகதைகளை தொகுத்து வெளியிட திட்டமிட்டிருந்தோம். 59சிறுகதைகள் அடங்கிய தொகுதியை வடிவமைத்து முன்னுரை எழுதுவதற்காக ஜோசப் அவர்களிடம் சமர்ப்பித்திருந்தோம். பிழைகளை திருத்திக்கொண்டிருந்த வேளையில் அவர் எம்மை விட்டு மறைந்தமை பெரும் துரதிர்ஷ்டமாகும். இவரின் சிறுகதைத் தொகுதி டிசம்பரில் வெளியிட உத்தேசித்துள்ளோம்' என்று தனது வெளியிட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தொகுப்பிலுள்ள 14 சிறுகதைகளும் உள்ளன. இத்தொகுப்பினூடாக மாத்தளை வடிவேலனின் தனித்துவங்களையும், மலையக இலக்கியத்தில் அவர் தனித்துவமான ஆளுமை என்பதையும் புரிந்து கொள்ள இயலும் என்று ஆய்வுரை நிகழ்த்திய கிழக்குப் பல்கலைகழக பேராசிரியர் மேகநாதன் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன் பிரதமஆசிரியர் செந்தில் வேலவர், கவிஞர் மேமன்கவி தி.ஞானசேகரம், உடுவை எஸ்.தில்லை நடராஜா, சிவலிங்கம் சதீஸ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்க மலையகத்தின் மூத்த எழுத்தாளர் கே.பொன்னுத்துரை நிகழ்ச்சிகளை சிறப்பாக நெறிப்படுத்தியுள்ளார்.

நூலாசிரியர் மாத்தளை பெ.வடிவேலன் தனது ஏற்புரையில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் தமிழ் கற்கைகள் நெறி, கலாசார பீடம் தனது சிறுகதை உட்பட இலக்கிய படைப்புகளை ஆய்வு நடாத்தி சிறப்பித்தமைக்கு நன்றி கூறியதுடன், தான் பணியாற்றி ஓய்வுநிலையை அடைந்த இந்து சமய கலாச்சாரத் திணைகளத்தின் உயர் அதிகாரிகள் உட்பட வர்த்தக பிரமுகர்களுக்கும், இலக்கிய அபிமானிகளுக்கும், தனது ஆக்கங்களை தொடர்ந்து பிரசுரித்து வரும் வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், நூலை பிரசுரித்த கலை ஒளி முத்தையா பிள்ளை நினைவுக்குழுவிற்கும் தமது நன்றியை தெரிவித்தார்.

**மரதன் கிருஷ்ணன்...**
மாத்தளை

# விண்வெளிக்கு மனிதரை அனுப்பும் இந்தியத் திட்டம் வெற்றிப்பாதையில்!



ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் மட்டுமே விண்வெளிக்கு மனிதனை இதுவரை அனுப்பியுள்ளன. இந்தச் சாதனையை எட்டுவதற்கு இந்தியா தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. கடந்த 2014 இல் இத்திட்டத்துக்கு 'ககன்யான்' எனப் பெயரிடப்பட்டு ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

பூமியில் இருந்து 400 கி.மீ. தூர சுற்று வட்டப் பாதைக்கு விண்கலம் மூலம் 23 விண்வெளி வீரர்களை அனுப்பி, 1 தொடக்கம் 3 நாள் ஆய்வுக்குப் பிறகு பூமிக்கு திரும்ப அழைத்து வருவதுதான் ககன்யான் திட்டத்தின் நோக்கம் ஆகும்.

வாகனத்தை விண்வெளிக்கு அனுப்பி, அதை மீண்டும் பூமிக்குக் கொண்டு வந்து, வங்காளவிரிகுடாவில் இறங்கியதும், அதனை அங்கிருந்து மீட்பது ஆகியவற்றை உள்ளடக்கியது இத்திட்டம். இதற்கான ஒத்திகைப் பணிகளை இந்திய கடற்படை ஏற்கனவே தொடங்கிவிட்டது. இந்நிலையில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவர் எஸ்.சோம்நாத் டெல்லியில் செய்தியாளர்களிடம் இதுபற்றிய விளக்கங்களை சில தினங்களுக்கு முன்னர் வழங்கியுள்ளார்.

விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் ககன்யான் திட்டம் தவிர பல்வேறு திட்டங்களில் இஸ்ரோ மும்முரமாக ஈடுபட்டுள்ளது. பூமியின் காலநிலை மற்றும் வானிலையை ஆய்வு செய்யும் திட்டங்களையும் இஸ்ரோ தொடங்கவுள்ளது. அதுதவிர தகவல் தொடர்பு உள்ளிட்ட வழக்கமான அறிவியல் பணிகளிலும் இஸ்ரோ ஈடுபட்டு வருகின்றது.

இது ஒருபுறமிருக்க ககன்யான் திட்டத்தின் முதல் கட்ட சோதனை இன்று 21 ஆம் திகதி மேற்கொள்ளப்படுகின்றது. ஹரிகோட்டாவில் இருந்து இன்றைய தினம் காலை 7 மணிமுதல் 9 மணிக்குள் விண்வெளி வாகனம் விண்ணில் ஏவப்படுகிறது.

"செவ்வாய், வெள்ளி, சந்திரன் போன்றவற்றுக்கான ஆய்வுத் திட்டங்களும் எங்களிடம் உள்ளன. சூரியனை ஆய்வு செய்யும் இந்தியாவின் முதல் திட்டமான ஆதித்யா எல்1 திட்டத்தை ஏற்கனவே முன்னெடுத்து வருகின்றோம். அந்த விண்கலம் ஆரோக்கியமாக உள்ளது. அது எல்1 புள்ளியை நோக்கி சரியான திசையில் செல்கிறது. எதிர்வரும் ஜனவரி நடுப்பகுதியில் எல்1 புள்ளியை அது சென்றடையும். பிறகு எல்1 புள்ளியில் உள்ள ஹாலோ சுற்றுவட்டப் பாதையில் அதை செலுத்துவதற்கான பணியில் நாங்கள் ஈடுபடுவோம். இதன் பிறகு கருவிகள் இயக்கப்பட்டவுடன் அறிவியல் தரவுகளை அளிக்கத் தொடங்கும்" என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறினார்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, நிலவுக்கு மூன்றாவது முறையாக சந்திரயான் 3 என்ற விண்கலத்தை இஸ்ரோ அனுப்பியது. இந்த விண்கலத்தில் இருந்து பிரிந்த விக்ரம் லேண்டர், கடந்த ஓகஸ்ட் 23 ஆம் திகதி நிலவில் தரையிறங்கி வரலாற்றுச் சாதனை படைத்தது.

விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பிறகு அதிலிருந்து பிரக்யான் ரோவர் கருவி வெளியே வந்து, நிலவின் மேற்பரப்பில் நகர்ந்து சென்று ஆய்வு மேற்கொண்டது. நிலவில் செப்டம்பர் 4 ஆம் திகதி பகல் பொழுது முடிவடைந்ததால், லேண்டர் மற்றும் ரோவரை உறங்குநிலைக்கு இஸ்ரோ மாற்றியது.

இது குறித்து சோம்நாத் கூறும்போது, "நிலவில் லேண்டர் மகிழ்ச்சியுடன் உறங்கிக் கொண்டிருக்கிறது. நிலவின் பகல் பொழுதில் திட்டமிடப்பட்டிருந்த பணிகளை அது வெற்றிகரமாக செய்து முடித்துள்ளது. அது விரும்பினால் விழித்து எழட்டும். அதுவரை காத்திருப்போம்" என்றார்.

இதேவேளை விண்வெளி வீரர்களை விண்வெளிக்குக் கொண்டு செல்லும் சுகன்யான் விண்கலத்தின் புகைப்படங்களை இஸ்ரோ பகிர்ந்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் மூன்று விண்வெளி வீரர்களை பூமியின் சுற்றுப்பாதைக்கு அனுப்புவதற்கு இஸ்ரோ திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விண்வெளி வீரர்கள் தங்குவதற்கான விண்கலம், விண்வெளி உடை, விண்வெளிப் பயணத்துக்குப் பிறகு பூமி திரும்பும் வீரர்கள் பத்திரமாக தரையிறங்குவதற்கான பரசூட் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

விண்வெளிக்கு அனுப்புவதற்காக இந்திய விமானப் படையைச் சேர்ந்த மூன்று விமானிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு ரஷ்யாவில் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது.

மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் இந்தியாவின் ககன்யான் திட்டத்தின் சோதனை ஓட்டமானது இன்று 21 ஆம் திகதி காலை 7 மணி முதல் 9 மணி வரை ஸ்ரீஹரிகோட்டாவில் நடைபெறுகின்றது.

சந்திரயான் 3 வெற்றிக்குப் பிறகு இஸ்ரோ உலக நாடுகளின் பார்வையில் மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிலையமான நாசா இந்திய விண்வெளி ஆய்வு நிலையமான இஸ்ரோவின் தொழில்நுட்பத்தை கோருவதாக இஸ்ரோவின் தலைவர் சோம்நாத் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ உலக நாடுகளுக்கு சவால் விடும் வகையில் கடந்த ஓகஸ்ட் மாதம் வெற்றிகரமாக சந்திரயான் 3 திட்டத்தை நிறைவேற்றியதையடுத்தே இந்தியாவின் மீது உலகநாடுகள் இவ்வாறான நம்பிக்கையைக் கொண்டுள்ளன.

இந்த வெற்றிக்குப் பிறகு இஸ்ரோ விஞ்ஞானிகளின் சாதனையை உலகில் உள்ள விண்வெளி ஆய்வு நிலையங்கள் அனைத்தும் உற்றுநோக்கி வருகின்றன. உலகில் வேறு எந்த நாடுகளும் செய்ய முடியாத சாதனையை இந்தியா எப்படி செய்தது என பலர் சிந்தித்து வருகின்றனர்.

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிலையமான நாசா இஸ்ரோவின் தொழில்நுட்பத்தை விலைக்குக் கேட்டதாக தகவல் ஒன்றை சோம்நாத் தெரிவித்துள்ளார். இது உலக அளவில் இந்திய விஞ்ஞானிகள் எவ்வளவு பெரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளனர் என்பதற்கு ஒரு சான்றாக அமைந்துள்ளது. இஸ்ரோ விஞ்ஞானிகள் அமெரிக்க விண்வெளி ஆய்வு மையத்திற்கு தொழில்நுட்பத்தை விற்பனை செய்யும் அளவிற்கு தங்களை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பது தெரிகிறது.

இந்தியாவின் தொழில்நுட்பத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு விஞ்ஞானிகளே வியந்து பார்ப்பது இஸ்ரோ விஞ்ஞானிகளின் கடின உழைப்புக்குக் கிடைத்த வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. இருந்தாலும் இந்தத் தொழில்நுட்பத்தை இந்தியா வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் திட்டத்தில் இல்லை என்று இஸ்ரோ தலைவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

"இந்தியா முதன் முதலாக நிலவுக்கு மனிதனை அனுப்பும் போது ஒரு பெண்ணைத்தான் அனுப்ப வேண்டும் என முடிவு செய்யும். சந்திரயான் 3 வெற்றி பெற்றதும், நான் பிரதமர் நரேந்திர மோடிக்கு இந்தியா நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கி விட்டது என்பதை அறிவித்தவுடன் பிரதமர் மோடி என்னைத் தொடர்பு கொண்டு பேசினார். அப்பொழுது அவர் 'நிலவிற்கு எப்பொழுது ஒரு இந்தியன் செல்வார்?' எனக் கேட்டார்" என்று சோம்நாத் குறிப்பிட்டார்.

சுகன்யானின் இன்றைய சோதனையின் போது விண்வெளியில் ரொக்கெட் பயணிக்கத் தொடங்கும் போது ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் ரொக்கெட்டின் உள்ளே உள்ள வீரர்கள் தப்பித்துக் கொள்வதற்காக 'எஸ்கேப் கேப்சூல்' ஒன்றைப் பொருத்தியுள்ளார்கள். அதையும் இன்றைய இந்த சோதனை கட்டத்தின் போது சோதனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

## இன்று ஹரிகோட்டாவில் சோதனை நடவடிக்கை; மூன்று வீரர்கள் விண்ணுக்குச் சென்று பரசூட் மூலம் கடலில் தரையிறங்குவர்!

சந்திரயான் 3, ஆதித்யா எல் 1 உள்ளிட்ட அடுத்தடுத்த வெற்றிகளுக்குப் பிறகு தற்போது ககன்யான் திட்டத்தையும் வெற்றிப்பாதைக்குக் கொண்டு செல்ல இஸ்ரோ தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்காகவே இன்றைய சோதனை நடைபெறுகின்றது. இதிலும் இஸ்ரோ வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சோதனை முயிற்சியில் வெற்றி பெற்றால் இரண்டாம் கட்ட சோதனை 2024 ஆம் ஆண்டு முதல் பாதியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி அது நடந்தால் ககன்யான் திட்டம் வெற்றிகரமாக மனிதர்களை விண்வெளிக்குக் கொண்டு செல்லத் தயாராகி விடும் என எதிர்பார்க்கலாம்.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2025 ஆம் ஆண்டில் இஸ்ரோ விண்வெளிக்கு மனிதர்களை வெற்றிகரமாக அனுப்பி சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விண்வெளி ஆய்வில் தற்போது உலகில் பல நாடுகளுக்கு இணையாக இஸ்ரோ வளர்ந்து வருகிறது. விண்வெளி ஆய்வில் வல்லரசு நாடுகளே சவால் விடும் வகையில் இந்தியா பல்வேறு சாதனைகளை செய்து வருகிறது. இந்தச் சாதனைகளுக்கெல்லாம் இஸ்ரோ விஞ்ஞானிகள்தான் காரணமாக இருக்கிறார்கள்.

## இந்தியாவின் விண்வெளி அறிவியல் தொழில்நுட்பத்தை தந்துதவுமாறு கோருகிறது அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசா!

**எஸ். சாரங்கன்...**

# கலைஞர் கருணாநிதி நாவல் படைப்பதற்கு உறுதுணையாக பணியாற்றிய செ.யோகநாதன்

பெருமளவு சிறுகதைகளையும் குறும் புதினங்களையும் எழுதிய செ. யோகநாதன் ஒக்டோபர் 1, 1941 இல் பிறந்த ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளராவார். புனைவுகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், குழந்தை இலக்கியம் என தொண்ணூறுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார்.

ஈழகேசரியின் மாணவர் மலருக்கு கவிதைகள், கட்டுரைகள் எழுதிப் பரிசுகள் பெற்றவர். 1962 இல் சிற்பியின் 'கலைச்செல்வி' இதழில் இவருடைய முதற்கதை வெளியானது. இதனை அடுத்து இவரது 'மலர்ந்த நெடுநிலா' என்ற குறும்புதினமும் கலைச்செல்வியில் வெளியானது.

சிறுகதை, நாவல், நாடகம், சினிமா என பல் துறையிலும் ஈடுபாடு கொண்டு கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் என பல பத்திரிகைகளிலும் செ. யோகநாதன் எழுதி வந்தவர். இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலும் பல ஆண்டுகள் கலைப்பணியாற்றியவர்.

ஐந்து தடவை இலங்கை அரசின் சாகித்திய மண்டல பரிசு பெற்றவர். தமிழகத்திலும் தழிழக அரசின் பல விருதுகளைப் பெற்றதோடு, முதல்வர் கலைஞர் கருணாநிதியாலும் பாராட்டும் பரிசும் பெற்றவர்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட யோகநாதன் பேராதனை பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர். ஆரம்பத்தில் கண்டியில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் இலங்கை நிர்வாகச் சேவையில் தேர்ச்சி பெற்று மட்டக்களப்பு, பூநகரி ஆகிய இடங்களில் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றினார்.

மார்க்சிய சித்தாந்தத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர். 1980களில் தமிழ்நாடு சென்று அங்கு பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து 1996 இல் இலங்கை திரும்பினார். இறுதியாக கொழும்பில் உள்ள எம். டி. குணசேனா நிறுவனம் தமிழ் நூல்களை வெளியிடத் தொடங்கிய போது அதற்குப் பொறுப்பாளராகப் பதவி ஏற்றார்.

"மக்களின் மொழியிலே எழுதப்பட வேண்டும். மக்களுக்கு எதிரான சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக எழுத வேண்டும். இலக்கியமென்பது வெறுமனே தனக்கு எதிரிலே நடந்தவற்றைப் பதிவு செய்கின்ற ஒன்று என்பதை நான் என்றுமே ஒப்புக் கொண்டதில்லை. அதற்கும் மேலாகப் போய் வாசகன் மனதில் ஒரு செய்தியை அல்லது செயலுக்கான ஊக்கத்தை அது பதிவு செய்தாக வேண்டும்.

படைப்பாளி தனது மக்களின் வாழ்வையும், உணர்வுகளையும், காலத்தையும் பதிவு செய்கின்றவன். இப்படிப் பதிவு செய்தே தனது எழுத்தை அவர்களின் போராட்டத்துக்குரிய ஆயுதமாக மாற்றி விடுகிறான்"என செ. யோகநாதன் எழுத்தாளனின் கடமையை வலியுறுத்தியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த 1964 ஆம் ஆண்டில் இவரது பத்துச் சிறுகதைகளைக் கொண்ட 'யோகநாதன் கதைகள்' சிறுகதைத் தொகுதி முதலில் வெளிவந்தது. 'அஞ்சலி' இதழில் வெளிவந்த 'ஒளி நமக்கு வேண்டும்' குறுநாவல் 1974 இல் நூலாக வெளிவந்து இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. பின்னர் பல மொழிகளில் இது மொழிபெயர்க்கப்பட்டது.

தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் தமிழக இதழ்களில் நிறைய சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள் எழுதினார்.

இந்திய மத்திய அரசு விருது:

செ. யோகநாதன் இந்திய மத்திய அரசின் பரிசு உட்பட தமிழக அரசின் விருதினை நான்கு தடவைகள் பெற்றுள்ளார். உயர் இலக்கிய விருதான இலக்கியச் சிந்தனை விருதினையும் நான்கு தடவை பெற்றுள்ளார். இலங்கை சாகித்திய விருது நான்கு தடவை கிடைத்துள்ளது. 1994 இல் 'இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்' என்று ஒவ்வொன்றும் 650 பக்கங்கள் கொண்ட வெள்ளிப் பாதசரம், ஒரு கூடைக் கொழுந்து ஆகிய இரண்டு தொகுதிகளை வெளியிட்டார்.

குழந்தை இலக்கியத்திலும் அதிக ஈடுபாடு காட்டிய செ.யோ அத்துறையில் பல நூல்களை எழுதியதுடன் மூன்று சிறுவர் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் விளங்கினார். தமிழ்த் திரைப்படத்துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர், இணை இயக்குநராகவும் செயற்பட்டார். அத்துடன் பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்தோரோடு, பல்கலைக்கழகத்துக்கு வெளியே தெணியான், தெளிவத்தை யோசப், பெனடிக்ட் பாலன் போன்ற எழுத்தாளர்களும் ஈழத்து சிறுகதை இலக்கியத்தை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் சென்றனர் என்பது முக்கியமான சங்கதியாகும்.



பல்கலைக்கழகத்தில் இருந்தபோது பல்கலைக்கழக வெளியீடாக வந்த கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளில் செ.யோகநாதன் அவர்களுடைய கதைகள் வெளிவந்திருக்கின்றன. பேராதனைப் பல்கலைக்கழகம் 1960, 64 களில் வெளிக்கொண்ர்ந்த முக்கிய படைப்பாளிகளில் யோகநாதனும் ஒருவர்.

தமிழகத்திலே இவர் எழுதாத பத்திரிகைகளே கிடையாது. எழுத்தாளர் அமரர் தி.ஜானகிராமன் அவர்கள் நினைவாக கணையாழி பத்திரிகை நடத்திய குறுநாவல் போட்டியிலே 'இரவல் தாய்நாடு' என்ற படைப்பை எழுதினார். உண்மையிலேயே எழுத்துலகில் அற்புதமான ஒரு குறுநாவல் இது.

அதற்குப் பிறகுதான் தமிழகமே விழித்துக் கொண்டது. ஒரு அற்புதமான படைப்பாளி இலங்கையில் இருந்து தமிழகம் வந்து தம்மிடையே இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட காலகட்டம் அதுதான்.

அந்த 'இரவல் தாய்நாடு' என்ற குறுநாவலைப் படித்துவிட்டுத்தான் கலைஞர் கருணாநிதி கூட அவரோடு தொடர்பு கொண்டார். கலைஞர் கருணாநிதி எழுதிய 'பாயும் புலி பண்டாரவன்னியன்' என்ற கதைக்குக் கூட யோகநாதன்தான் தேவையான ஆவணங்களை எடுத்துக் கொடுத்தார் என்பது அவர் எழுதிய கடிதத்தில் இருந்து புரியக் கூடியதாக இருக்கின்றது. பாயும் புலி பண்டாரவன்னியன் ஓர் அற்புதமான நாவலாக உருவாகுவதற்கு யோகநாதன் மூலகாரணமாக இருந்திருக்கின்றார்.

யோகநாதன் எழுதிய 'கண்ணீர் விட்டோ வளர்த்தோம்' என்பது மிக முக்கியமான இன்னொரு சிறுகதைத் தொகுதி. அது இந்தியாவிலே வெளிவந்தது. இதற்காக இந்திய இலக்கியச் சிந்தனை, எழுத்தாளர் பேரவை எல்லாம் அவருக்கு பரிசளித்துக் கௌரவித்தன.

ஈழத்துச் சிறுகதைத் துறையிலே செ.யோகநாதனின் பாரிய பங்களிப்பாக விளங்குவது, அவர் தமிழகத்திலே வாழ்ந்த காலத்திலே 'இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்' என்ற இரண்டு பெரிய சிறுகதைத் தொகுதிகளை ஈழத்தின் பலதரப்பட்ட எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கொண்டு வெளியிட்டமை ஆகும். ஆயிரம் பக்கங்களுக்கு மேல் இரண்டு பெரிய சிறுகதைத் தொகுதிகளாக, அவர் தமிழகத்தில் இருந்தபோது அதனை வெளியிட்டிருக்கின்றார்.


தான் மட்டும் வாழ்ந்தால் போதுமென்று நிற்காது, ஈழத்திலே மறந்து கிடந்த எழுத்துலகச் சிற்பிகளை எல்லாம் அதிலே அவர் அறிமுகப் படுத்தியிருக்கின்றார். 'வெள்ளிப்பாதரசம்' ஒரு தொகுதி, 'ஒரு கூடைக் கொழுந்து' இன்னொரு தொகுதி.

இந்த இரண்டு தொகுதிகள் மூலம் ஈழத்தைச் சேர்ந்த குறைந்தது ஐம்பது எழுத்தாளர்களையாவது அவர் தமிழகத்திலே அறிமுகம் செய்திருக்கின்றார். இதன் மூலம் ஒரு சிறந்த ஒரு படைப்பாளியாக அவர் தொழிற்பட்டிருக்கின்றார்.

சகலவித ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து மானுட மேன்மையை நிலைநிறுத்த விரும்பிய செ. யோகநாதன் 2008, ஜனவரி 28 இல் மாரடைப்பினால் தனது 66 ஆவது அகவையில் காலமானார்.

## 'இரவல் தாய்நாடு' படைத்த எழுத்தாளுமை; ஈழத்து இலக்கியத்துறையின் முன்னோடி






**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# தேங்கி நிற்கும் கழிவுநீரினால் பெரியநீலாவணை இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத்திட்டத்தில் சுகாதார சீர்கேடு



கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பெரிய நீலாவணை இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் தேங்கிநிற்கும் கழிவுநீரினால் பாரிய சுகாதார சீர்கேடு இடம்பெறுவதாக அங்கு வாழும் குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட 96 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் 18 வருங்களாக முறையான வடிகான் இன்மையால் சமையலறைக் கழிவுநீர், குழியலறைக் கழிவுநீர் மற்றும் மலசல கூட கழிவுகள் போன்றவை வீட்டுத்திட்டத்தின் பின்புறங்களில் தேங்கிநின்று பாரிய அளவிலான நுளம்புகளைப் பெருக்கி டெங்கு, மலேரியா போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றன.



மக்கள் செறிந்து வாழும் இந்த வீட்டுத்திட்டத்திலும் அதனை அண்டிய குடியிருப்புகள், பாடசாலை, வைத்தியசாலை, பொலிஸ் நிலையம் போன்ற அரச நிறுவனங்களிலும் பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், நோயாளர்கள், அரச அதிகாரிகள் என பலரும் வசிப்பதால் தேங்கிநிற்கும் கழிவுநீரால் மாத்திரமன்றி பருவமழை ஏற்படுகின்ற காலத்தில் தேங்கி நிற்கும் மழைநீராலும் இலகுவில் நோய்த்தொற்று ஏற்பட்டு மக்களுக்கு உயிராபத்து ஏற்படும் அவல நிலையும் காணப்படுகின்றது. காலத்துக்குக் காலம் அரசியல்வாதிகள் பலரும் அதிகாரிகளுடன் வந்து இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து தருவதாக வாக்குறுதியளித்து செல்கிறார்கள். ஆனால் நாங்கள் இவ்வாறான நெருக்கடியான வாழ்விலிருந்து மீண்டபாடில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

**வாஹிட் முகம்மட் ஜெஸீல்...**

# சாஹித்ய ரத்னா தெளிவத்தை ஜோசப்பின் முதலாம் ஆண்டு நினைவு தினம்

இலங்கை மலையகத்தின் இலக்கியச் சுடராக ஒளிர்ந்து, சிறுகதை, நாவல்,திரைக்கதை, இதழியல், ஆய்வு இலக்கியம் என எழுத்துலகில் பன்முக ஆளுமையாக வாழ்ந்து மறைந்த இலங்கையின் முதுபெரும் எழுத்தாளர் சாஹித்ய ரத்ன தெளிவத்தை ஜோசப்பின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி கொழும்பு 2 கொம்பனித்தெரு குழந்தை யேசு ஆலயத்தில் விஷேட திருப்பலி ஆராதனை இடம்பெறவுள்ளதாக அன்னாரின் குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். தெளிவத்தை ஜோசப்பின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழகத்தின் திருச்சி நகரத்திலும் நடைபெற உள்ளது. தமிழ்க்காவிரி கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் சட்டத்தரணி தமிழகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் முன்னாள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் எழுத்தாளருமான மல்லியப்புசந்தி திலகர் சிறப்புரை ஆற்றவுள்ளார். தெளிவத்தை ஜோசப்பின் சகோதரரும் எழுத்தாளருமான குடந்தை பரிபூரணன் தலைமையில் 'மலையக மாருதம்' தாய்வீடு மலையகம் 200 சிறப்பிதழ் தமிழகன் எழுதிய 'களுகங்கை முதல் காவிரி வரை' நூல் ஆகியவற்றின் அறிமுகமும் உரையாடலும் இடம்பெறவுள்ளது.

## பொன் விழா காணும் ஜனரஞ்சக எழுத்தாளரின் பொன்னான திகில் தொடர் கதை விரைவில் தினகரன் வாரமஞ்சரியில்!



அவளோ அழகின் உறைவிடம்!
அவனோ அவலட்சணத்தின் பிறப்பிடம்!
இதனால் அழகிய பெண்களைக் கண்டால் பிடிக்காது அவனுக்கு!
இதில்தான் சுவாரஸ்யம் கிடைக்கப் போகிறது உங்களுக்கு!
மர்மத்திரை மூடிக்கொள்ளப் போகிறது!



//ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன் எழுதும்
//துப்பாக்கி முனையில் துர்கா!//
@விரைவில்! மிக மிக விரைவில்!
//உங்கள் தினகரன் வார மஞ்சரியில்!
//புதிய பயணம்!

## பங்காரு அடிகளார்...

அவர் இருந்ததுடன், ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் அனைத்து நாட்களிலும் பெண்கள் வழிபடலாமென்ற முறையை அமுல்படுத்தி அவர் பெரும் புரட்சி செய்தார்.

பங்காரு அடிகளாரின் ஆன்மிக சேவையை பாராட்டி கடந்த 2019ஆம் ஆண்டு அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. சித்தர் பீடம், கல்வி நிறுவனங்கள் மூலம் ஏராளமான சமூக சேவைகளையும் செய்த அவர், மேல்மருவத்தூர் சித்தர் பீடக் கருவறையில் அபிஷேக ஆராதனை செய்ய பெண்களையும் அனுமதித்தார். ஆதிபராசக்தி மருத்துவ கல்வி மற்றும் பண்பாட்டு அறக்கட்டளையின் தலைவராக அவர் இருந்ததுடன், பங்காரு அடிகளாரை பின்பற்றும் பக்தர்கள் 15 நாடுகளில் உள்ளனர்.

பங்காரு அடிகளாரின் பூதவுடலுக்கு 21 குண்டுகள் முழங்க அரச மரியாதையுடன் இறுதிச் சடங்கு நேற்று நடைபெற்று, 'ஓம் சக்தி, பரா சக்தி' என பக்தர்களின் குரல் ஒலிக்க பங்காரு அடிகளாரின் பூதவுடல் சித்தர் முறைப்படி அமர்ந்த நிலையில் சமாதி செய்யப்பட்டது.

## இலங்கைக்கு விரைவில்...

தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, "சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் மேற்கொண்டுள்ள உடன்படிக்கை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இரண்டாம் தவணைத் தொகையை பெற்றுக்கொள்வது தொடர்பாக அவசியமாக இருந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் அங்கீகாரம் நேற்று கிடைத்துள்ளது. இது தொடர்பாக நீண்ட மீளாய்வுகள் இடம்பெற்றன. சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டக் குழு, இலங்கைக்கு வருகை தந்து இரண்டு வாரங்களாக விரிவான மீளாய்வுகளை நடத்தியது. மேலும் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டி இருந்தமையால், அதன்போது எங்களால் அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

இதற்கமைய நாம் மொரோக்கோவில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் கூட்டத்தொடரில் இது தொடர்பாக மேலும் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தினோம். அதன்போது இன்னும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக எமக்கு தெளிவுகள் பெற வேண்டியிருந்ததால், நாம் மீண்டும் இலங்கைக்கு வந்து அவர்களுடன் இணைய வழியில் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். நேற்று முன்தினம் (19) இந்தத் தீர்மானமிக்க அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு வரும் செயற்பாடு, சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மற்றும் எமது நாட்டின் அதிகாரிகள், குறிப்பாக மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளிகள் ஆகியோருக்கிடையில் நடைபெற்றது.

## அரசியல் நோக்கங்கள் எதுவுமின்றி...

சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குக்கும் இடையிலான இருதரப்புச் சந்திப்பு நேற்று (20) சீன மக்கள் பொதுச் சபையில் நடைபெற்றது.

இதன்போது சீன ஜனாதிபதியினால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், சிநேகபூர்வ கலந்துரையாடலின் பின்னர் அரச தலைவர்கள் இருவரும் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

சீனாவின் 'பெல்ட் அண்ட் றோட்' வேலைத்திட்டத்துக்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் நன்றி தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுக வேலைத்திட்டத்தை 'பெல்ட் அண்ட் றோட்' வேலைத்திட்டத்தின் கீழான முதலாவது வேலைத் திட்டங்களாக கருதுவதாகவும் இலங்கை உற்பத்திகளை சீனாவுக்கு இறக்குமதி செய்யும் அதேவேளை, இலங்கைக்குள் சீன முதலீடுகளை அதிகளவில் மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் சீன ஜனாதிபதி உறுதியளித்தார்.

மேலும், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு சிநேகபூர்வ நடைமுறை மற்றும் துரித ஒத்துழைப்புகளை வழங்கத் தயாரெனவும், சீன ஜனாதிபதி உறுதியளித்தார்.

## உணர்வுபூர்வமான பிரச்சினைகளையும்...

தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினராகவும் தற்போதைய அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சர்களினுள் ஒருவராகவும் பணியாற்றி வருவதாகவும், அவர் தெரிவித்தார். கடல்சார் ஒத்துழைப்புக்கான கருப்பொருள் எனும் தொனிப்பொருளில் கடந்த 18ஆம் திகதி சீனாவில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## பாராளுமன்ற கட்டடத்துக்குள் தாக்குதல்...

முறைப்பாடு தொடர்பாகவும் விசாரணை நடத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குழுவொன்றை நியமித்துள்ளார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

இந்தக் குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, ரமேஷ் பத்திரண, கயந்த கருணாதிலக, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் உள்ளடங்குவதாகவும் இந்தக் குழுவினர் விசாரணை நடத்தி தீர்ப்பை அறிவிப்பார்களெனவும், சபாநாயகர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தன்மீது சபைக்கு வெளியே வைத்து ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சுஜித் பெரேரா தாக்கியதாக சபையில் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். டயனா கமகேயினால் சுஜித் பெரேரா எம்.பி.யே தாக்கப்பட்டதாக கூறி அதற்கான வீடியோ ஆதாரத்தை எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் கையளித்தனர்.

பாராளுமன்றத்தில் நேற்று இஸ்ரேல் ஹமாஸ் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதம் நடைபெற்றது. இதன்போது, மாலை 3.55 மணியளவில் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயான கமகே திடீரென சபைக்குள் வந்து ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி விடயத்தை முன்வைத்தார்.

அதில், இராஜாங்க அமைச்சரான நான் சபைக்கு வெளியில் நின்ற போது அங்கு வந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான சுஜித் பெரேரா, என்னுடன் தர்க்கப்பட்டு என்னை தாக்கினார். ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் பெண்களை துஷ்பிரயோகம் செய்வதிலேயே ஆர்வமாக உள்ளனர்.

சுஜித் பெரேரா எம்.பி. வீட்டில் தனது மனைவியை தாக்குவது போலவே ஒரு பெண் பாராளுமன்ற உறுப்பினரான என்னையும் தாக்கினார்.

இந்த விடயத்தை நான் எளிதில் விடமாட்டேன். சட்ட நடவடிக்கை எடுப்பேன். அதுமட்டுமன்றி நான் வீதியில் இறங்கிப் போராடவுள்ளேன். எனவே, என்மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் தொடர்பாக சபாநாயகர் உடனடியா விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

## மின் கட்டணங்களை அதிகரிக்க...

12 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நிலையான கட்டணத்தை 150 ரூபாவிலிருந்து 180 ரூபாவாக அதிகரித்துள்ளது.

31 முதல் 60 வரையான அலகுகளுக்கான கட்டணம் 25 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நிலையான கட்டணம் 300 ரூபாவிலிருந்து 360 ரூபாவாக அதிகரித்துள்ளது. 61 முதல் 90 வரையான அலகுகளுக்கான கட்டணம் 35 ரூபாவிலிருந்து 41 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதன் நிலையான கட்டணம் 400 ரூபாவிலிருந்து 480 ரூபாவாக அதிகரித்துள்ளது. 91 முதல் 120 வரையான அலகுகளுக்கான கட்டணம் 50 ரூபாவிலிருந்து 59 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதன் நிலையான கட்டணம் 1,180 ரூபாவாக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீலாத் விழா நிகழ்வுகள்...

இந்த விழா தொடர்பான மீளாய்வுக் கூட்டம், முசலி பிரதேச செயலகத்தில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் ஜனாதிபதியின் வடமாகாணத்துக்கான இணைப்புச் செயலாளர் இலங்கோவனின் பங்களிப்புடன் நடைபெற்றது. இதன் பின்னர், அவர்கள் கள விஜயம் செய்த போதே, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

பருவப்பெயர்ச்சி மழைக்காலமென்பதால், மன்னாரில் அடை மழை பெய்து வருகின்றது. இதனால் இந்த விழாவை சிலாவத்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து முசலி தேசிய பாடசாலைக்கு மாற்றி நடத்தவுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விழாவை முன்னிட்டு130 மில்லியன் ரூபா செலவில் மன்னாரில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விழாவையிட்டு மன்னார் மாவட்ட அபிவிருத்திகள் அடுத்த வருடமும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென்பதுடன், மன்னாரில் பிரதான மூன்று நகரங்களை அபிவிருத்தி செய்வதற்காக 150 மில்லியன் ரூபாவை நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையிலும் தமிழரின் நியாயமான...

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இஸ்ரேல் பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த மனோ கணேசன் எம்.பி.,

"காஸாவில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக துன்பப்படும் மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், பாதிக்கப்பட்ட இஸ்ரேலிய மக்களுக்கும் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். பலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் அடாவடித்தனத்தாலேயே இந்த அழிவுகள் நடக்கின்றன. காஸாவில் மருத்துவமனை மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. பாடசாலைகள், மக்கள் குடியிருப்புகள் மீதும் குண்டுகள் விழுகின்றன. இலங்கையிலும் இதுபோன்ற சம்பவங்களே நடந்தன.

எவ்வாறாயினும், பிரச்சினைகளுக்கு யுத்தம் தீர்வாக அமையாது. அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதற்கான தீர்வுக்கு மூல காரணத்தை கண்டறிய வேண்டும்.

## வடக்கு, கிழக்கில் ஹர்த்தால்...

நேற்று முன்தினம் (19) தமிழ்க் கட்சிகள் விடுத்த அறிக்கையில், பாடசாலைகளையும் புறக்கணிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், பாடசாலைகள் வழமை போல் இயங்கிய நிலைமை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் தவணை பரீட்சை நடைபெறுவதன் காரணமாக வடக்கு மாகாணப் பாடசாலைகளில் 98 சதவீதமான மாணவர்களின் வருகை காணப்பட்டதாக, வடமாகாண கல்வித் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வருகை சில பாடசாலைகளில் குறைவடைந்துள்ள போதிலும், ஏனைய தீவக வலயம் உட்பட சகல பாடசாலைகளிலும் 98 சதவீதமான மாணவர்களின் வரவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் சரவணராஜா மீதான அச்சுறுத்தலின் மூலம் நீதித்துறை சுயாதீனமாக செயற்பட முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாக நிர்வாக முடக்கல் போராட்டத்தை முன்னெடுத்துள்ள தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

நீதவான் மீதான அழுத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்தும் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் நிர்வாக முடக்கப் போராட்டத்துக்கு வவுனியாவில் முழுமையான ஆதரவு வழங்கப்பட்டது.

அந்த வகையில், அம்மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன், பொதுமக்களின் நடமாட்டம் மிகக் குறைவாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அரச பஸ் சேவைகள் வழமைபோல இடம்பெற்றதுடன், தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தமையை காணக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மாகாணங்கள் ஒவ்வொன்றும்...

வெளியேற்ற முயற்சித்தால், தமிழ் சிங்கள இன முரண்பாடே உருவாகுமெனவும், அவர் தெரிவித்தார்.

## 45 அடி பள்ளத்தில் விழுந்து...

பயணித்த இந்த பஸ் வண்டி, கடவத்தை வீதியில் யோத உலபத்த பிரதேசத்தில் சுமார் 45 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதாக, கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

67 வயதுடைய ஏ.எம் குசுமாவதி என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

## பயணிகள் கப்பல் சேவை...

அறிவிக்கப்பட்டுள்ளது. பயணிகள் கப்பல் சேவை கடந்த 14ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. போதிய முன்பதிவு இன்மையால், இந்த கப்பல் சேவையை வாராந்தம் 3 தினங்களுக்கு மட்டும் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் பருவப்பெயர்ச்சி மழை காரணமாக கப்பல் சேவையை அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளதாக கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

## யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்...

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதுடன், அவர்கள் நாளை (22) வரை அங்கு தங்கியிருக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற இடங்களை அவர்கள் பார்வையிட்ட பின்னர் மீண்டும் மஹியங்கனைக்கு செல்லவுள்ளனர்.

## பலஸ்தீன பேரழிவுகள் உடன்...

மேற்கொண்டு, சமாதானத் தீர்வை பெற்றுக்கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இஸ்ரேல் பாலஸ்தீன தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## நுரைச்சோலையில்...

சைக்கிளொன்றும் நேருக்குநேர் மோதி விபத்து இடம்பெற்றது.

கற்பிட்டி, தலவில பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே விபத்தை எதிர்நோக்கியதாக, நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

தனது தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் சிறுவன் பயணித்த போதே, விபத்து இடம்பெற்றதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் இந்தச் சிறுவன் உட்பட மூவர் பயணித்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த சிறுவன் உட்பட மூவரும் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக, புத்தளம் திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிசாம் தெரிவித்தார்.

விபத்தில் படுகாயமடைந்த ஏனைய இருவரும் புத்தளம் தள வைத்தியசாலையிலிருந்து, மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட இருவரில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர், முறையற்ற வகையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியமையால் விபத்து ஏற்பட்டமை ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தை தொடர்ந்து லொறிச் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்தில் பலியான சிறுவனின் தாய் தொழில் நிமித்தம் வெளிநாட்டிலுள்ளமை தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த விபத்துச் சம்பவம், வீதியோரத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.ரீ.வி. கமெரா வில் பதிவாகியுள்ளது.

## தமது பிரஜைகளுக்கு அமெரிக்கா...

தாக்குதல்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் நடத்தப்படலாமெனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள எச்சரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

## 2030 இல் பாடசாலை மாணவர்...

அவர் தெரிவித்தார். மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்துவது தொடர்பான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார்.


# இன்றைய பலன்கள்

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)






**மேஷம்:** உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.தள்ளி வைத்த வேலையை செய்ய நேரலாம். சொந்த தொழிலி புதிய ஒப்பந்தங்கள் மூலம் வேலைப்பளு அதிகரிக்கும்.



**ரிஷபம்:** உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பாராத இடமாற்றமும் சம்பள உயர்வும் கிடைக்கலாம். அலுவலகம் பற்றி யாரிடமும் விமர்சிக்காமல் இருப்பது நல்லது.




**மிதுனம்:**உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புக்களில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோவப்பார்வைக்கு இலக்காக நேரிடும்.




**கடகம்:**சில விஷயங்களில் கூட்டு முயற்சி பயன் தரும். பயணங்களின்போது கவனமாக இருப்பது பயன் தரும். உத்தியோகத்தில் பதவி,சம்பள உயர்வுக்காக செய்த முயற்சி பயன் தரும்.



**சிம்மம்:**வெற்றியடையாத காரியங்களுக்காக தக்க நண்பர்களின் உதவியோடு மீண்டும் முயற்ச்சிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விடுமுறையில் உள்ள சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்யும் நிலை ஏற்படலாம்.



**கன்னி:**சில செயல்களில் தளர்வு ஏற்பட்டு மனதில் கலக்கம் ஏற்படலாம்.நண்பர்களின் உதவியை பெற முற்படுவீர்கள்.உத்தியோகத்தில் வழக்கத்திற்கு மாறான வேலைப்பளுவால் அவதிப்படலாம்.




**துலாம்:**உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகளிடம் சுமுகமாக நடந்துகொள்ளாமல் பிரச்சினைகள் உருவாகலாம். சொந்த தொழிலில் புதிய நபர்களின் வருகையும் அவர்களால் பண வரவும் உண்டாகும்.




**விருச்சிகம்:**தர்ம காரியங்களிலும் புண்ணிய செயல்களிலும் நாட்டம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் விருப்பப்படி பணியை செய்துகொடுக்க நேரிடும்.



**தனுசு:**முக்கிய ஆண்மீக நிகழ்ச்சிக்கு பண உதவி செய்யும் சந்தர்ப்பம் ஏற்படும்.உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள பொருட்களா பாதுகாப்பாக வைத்துக்கொள்வது அவசியம்.



**மகரம்:**உத்தியோகத்தர்கள் தங்கள் பொறுப்புக்களில் கவனம் செலுத்தாவிட்டால் உயரதிகாரிகளின் பார்வையில் தென்படும் குறைகளுக்கு பதில் சொல்ல வேண்டியதிருக்கும்.



**கும்பம்:**சிலருக்கு அலுவலகத்தில் முக்கிய பொறுப்பு வந்து சேரும். சொந்த தொலில் முன்னேற்றமான போக்கு காணப்படும்.புதிய வாடிக்கையாளர்களால் தொழில் ரீதியான முன்னேற்றம் கிடைக்கும்.



**மீனம்:**பண விவகாரங்களில் ஒரு முறைக்கு இரு முறை நிதானமாக யோசித்து செய்வது நன்மை தரும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு அலுவலகத்தில் கிடைக்க வேண்டிய கடன் தொகை கிடைக்கும்.

# நுவரெலியாவில் பாவரசா நர்த்தனாலயத்தின் நடனம்



பாவரசா நர்த்தனாலயத்தின் நடன ஆசிரியை கலாவிபூஷண ரேணுசஹானா செட்டியார், நுவரெலியா சமர்ஹில் சமூகமட்ட அமைப்புடன் இணைந்து நுவரெலியா ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 2023.10.29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சிறுவர் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று நடாத்தவுள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி, தினகரன், தினகரன் வாரமஞ்சரி, சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நுவரெலியா ரொட்டரி கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்றைய சிறுவர்கள், நாளை தலைவர்கள் நாளைய தலைவர்கள் இன்று மாற்றத்தை கொண்டு வருவோம் என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வுகள் யாவும் இடம்பெறவுள்ளன.

இதில் பாவரசா நர்த்தனாலய மாணவிகளின் விழிப்புணர்வு நடனங்களும் நாடகங்களும் அரங்கேறப்படவுள்ளன. சர்வமத அறநெறிப் பாடசாலைகளும் பங்கேற்கவுள்ள இந்நிகழ்வில், சித்திரக் கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளது. தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான புலிஆட்ட நடனமும் பாவரசா நர்த்தனாலய மாணவிகளால் இங்கு மேடையேற்றப்படவுள்ளது.

## இலங்கை வழங்கிய... (03ஆம் பக்கத் தொடர்)

சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்வதே இலங்கையின் எதிர்பார்ப்பாகுமென்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதேபோல் பிராந்திய பொருளாதார உறவுகளுக்கான (RCEP) அமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை முயற்சிப்பதாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கு சீன துணைப் பிரதமர் இரவுவேளை விருந்துபசாரத்தையும் வழங்கினார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் சமன் அதாவுதஹெட்டி, வெளிவிவகார அமைச்சின் பிரதான இணைப்பு அதிகாரி செனரத் திஸாநாயக்க, சீனாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் பிரதானி கே.கே.யோகநாதன், ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா மற்றும் ஜனாதிபதியின் சர்வதேச விவகார பணிப்பாளர் ரிஷான் டி சில்வா ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

## ஒருபோதும் குறைத்து... (03ஆம் பக்கத் தொடர்)

நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு ஊழல், மோசடி பிரதான காரணமென மக்கள் அழுத்தமாக குறிப்பிடுகிறார்கள். ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முறையாக செயற்படாத காரணத்தாலேயே பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பாராளுமன்றத்தினால் ஊழலை இல்லாதொழிக்க முடியாது. ஊழலை ஒழிப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டன. எனினும், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முறையாக செயற்படவில்லை.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கமைய இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை.

தற்போதைய உறுப்பினர்கள் பதில் உறுப்பினர்களாகவே பதவி வகிக்கின்றனர். உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட போது, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சட்டமூலத்தை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தினார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் சபாநாயகருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர். ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் திருப்திகரமான அபிப்பிராயம் கிடையாது. வெகுவிரைவில் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

## காஸா மோதலை... (03ஆம் பக்கத் தொடர்)

காப்பாற்றினார்கள். அந்த வகையில், காஸா மோதலை இலங்கையுடன் ஒப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இஸ்ரேல் பலஸ்தீனம் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையினூடாக தீர்வு காண வேண்டும்.

1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை தற்போது செயற்படுத்த வேண்டும்.

மனித உரிமைகள் தொடர்பாக பேசும் பலம் வாய்ந்த நாடுகள், தங்களின் அதிகாரப் போட்டிகளை கைவிட்டு, உண்மையான மனித உரிமைக் கொள்கையுடன் செயற்பட வேண்டும்" என்றார்.

# கிழக்கின் குரல்



## இலங்கை மூலதன சந்தை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் உந்து சக்தி

(ஒலுவில் விசேட நிருபர்)

இலங்கை மூலதன சந்தையானது எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிரந்தர அபிவிருத்தியின் முக்கிய உந்து சக்தியாக அமைந்துள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

இலங்கை பங்குப்பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை இணைந்து மூலதனச் சந்தை திறந்த வினா விடைப் போட்டி வியாழக்கிழமை (19) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

இதில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். பேராசிரியர் ஏ.எம்.எம்.முஸ்தபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய இளைஞர் சமூகம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மூலதன சந்தை தொடர்பான அறிவு, மற்றும் போட்டி சந்தை ஆய்வு தொடர்பான பல தகவல்களை வழங்குகின்றமை தேசத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பாகும்.

இப்போட்டியானது நாடளாவியரீதியில் பல்கலைக்கழகங்களில் நடாத்துவது தற்போதைய பொருளாதார நெருக்கடியில்



எமது நாட்டின் மாணவர் சமுதாயத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பாகும்.

மாணவர்களுக்கிடையில் மூலதனச் சந்தை தொடர்பான அறிவு அத்தோடு நிதி, பொருளாதாரம், கல்வி, அரசியல் ரீதியான அறிவினை மேம்படுத்தவும், விருத்தி செய்யவும் திறந்த போட்டி பிரதான பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

## விபுலானந்தா சனசமூக நிலைய நவராத்திரி விழா!



காரைதீவு விளையாட்டுக் கழகம் மற்றும் விபுலானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்த நவராத்திரி விழா கழக இளம் வீரர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதற்கமைய இம்முறை சனசமூக நிலையம் வேப்பிலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. தினமும் மாலையில் விசேட பூஜை ஆராதனை என்பன இடம்பெற்று வருகின்றது. (காரைதீவு குறூப் நிருபர்)

## ஜனாதிபதி தேசிய விருதுக்கு தொழிலதிபர் என்.எம். றிஸ்மீர் தெரிவு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



கைத்தொழில் திறமைக்கான "மத்திய ரக" ஜனாதிபதி தேசிய விருதுக்காக சாய்ந்தமருது பிரபல தொழிலதிபர் என்.எம். றிஸ்மீரின் றியோவின் மார்கட்டிங் நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தேசிய விருது வழங்கும் நிகழ்ச்சி ஜனாதிபதி தலைமையில் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி கொழும்பில் விமரிசையாக இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொழிலதிபரும் கல்முனை மாநகரசபை முன்னாள் உறுப்பினருமான என்.எம்.றிஸ்மீர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களால் தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

## காத்தான்குடியில் Srilanka pen club இன் மூன்றாவது தேசிய மகாநாடு

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான 'Srilanka pen' கிளப்பின் மூன்றாவது தேசிய மாநாடு இவ்வருடம் ஒக்டோபர் 21 ஆம் திகதி சனிக்கிழமை 'குடும்பம் எங்கள் விழி ஆற்றல் எங்கள் வழி" எனும் தொனிப்பொருளில் காத்தான்குடி CIG மண்டபத்தில் ஸ்தாபக தலைவி சம்மாந்துறை மசூரா தலைமையில் நடைப்பெறவுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சுமார் அறுபது பெண் எழுத்தாளர்கள் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் மற்றும் அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற மெய்யியல் துறை பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் மற்றும் கல்விமான்கள் கலைஞர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதல் அமர்வு பெண்களுக்கு மட்டுமானது. இரண்டாம் அமர்வில் "இமயம் தழுவும் இறக்கைகள்" மொழிபெயர்ப்பு கவிதை வெளியீடும், போட்டிகளின் பரிசளிப்பும் நடைபெறவுள்ளன. மூன்றாவது அமர்வில் sirlanka pen கிளப்பின் சிறந்த நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள், நெறியாளர்களுக்கான விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

## பஸ் நிலையத்தில் கண்டெடுத்த தங்க ஆபரணத்தை உரியவரிடம் ஒப்படைத்த கார்த்திகேசு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

திருக்கோவிலைச் சேர்ந்த மலேரியா ஒழிப்பு பிரிவில் கடமையாற்றும் கணபதிப்பிள்ளை கார்த்திகேசு என்பவர் வீதியில் கண்டெடுத்த தங்க ஆபரணமொன்றை உரியவரிடம் பெரும் மனிதநேயத்துடன் ஒப்படைத்துள்ளார். இச்சம்பவம் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. வீதியில் கண்டெடுத்த தங்க ஆபரணத்தை பொலிஸ்நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். பொலிஸ் நிலையத்தின் ஊடாக தங்கஆபரணம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ.பி.விஜயதுங்கவின் ஆலோசனைக்கமைவாக பெருங்குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி எம்.எச்.எம்.ஹசிப் தலைமையிலான பொலிஸார் தங்க ஆபரணத்தை பொறுப்பேற்றதன் பின்னர், தங்க ஆபரணத்தை ஒப்படைத்தவரை பாராட்டி கௌரவித்ததோடு, அக்கரைப்பற்று பொலிஸ் ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆறுமுகம் அசோக்க, கார்த்திகேசுக்கு நன்றியை பாராட்டினையும் தெரிவித்துக் கொண்டார். தானும் ஒரு ஏழை என்பதால் தினமும் நாம் எதிர்கொள்ளும் கஷ்டங்களை நன்கறிந்தவன். நகையை தவறியவன் படும் வேதனை எனக்கு நன்றாக புரியும். அந்தவகையில் மற்றவர்களின் பொருட்கள் எனக்கு சொந்த



மில்லை என்று உணர்ந்ததாலேயே இப்பொருள் உரியவர்களிடம் சென்றடைய வேண்டும் என்பதற்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தேன் என அவர் கண்ணீர் மல்க தெரிவித்தார்.


## குருமண்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு குருமண்வெளி பிரசித்திபெற்ற அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு சக்திவிழா நேற்று (20) காலை சங்காபிஷேக கிரியைகளுடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 8 நாட்கள் சக்தி விழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 27 ஆம் திகதி பிள்ளையார் பூஜை மற்றும் கும்பம் சொரிதலுமன் நிறைவுபெறவுள்ளது.

சக்தி விழா கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ வே. குகேந்திரக் குருக்கள் தலைமையிலான குழுவினர் மேற்கொள்கின்றனர்.

## வித்தியாரம்ப விழா



(காரைதீவு குறூப் நிருபர்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்துசமய கலாசார கற்கைகள் நிறுவகத்தின் அம்பாறை மாவட்ட காரைதீவு சுவாமி விபுலாநந்தர் பயிற்சி நிலையத்தின் ஊடாக வழங்கப்படும் பயிற்சி நெறிகளுக்கான வித்தியாரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் 24.10.2023 செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இடம்பெறும்.

யோகாசனம், பண்ணிசை, பரத நாட்டியம் ஆகிய கலைகளுக்கான பயிலுனர்களை தேர்ந்தெடுக்கும் வித்தியாரம்ப நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றது.

## பொத்துவில் தேர்தல் தொகுதி இணை அமைப்பாளராக வினோகாந்த் நியமனம்!

(காரைதீவு குறூப் நிருபர்)

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொகுதி இணை அமைப்பாளராக புதிய வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த கட்சி முக்கியஸ்தர் வெள்ளையன் வினோகாந்த் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசா நேற்று முன்தினம் வழங்கி வைத்தார். பொத்துவில் தொகுதியிலுள்ள திருக்கோவில் ஆலையடிவேம்பு காரைதீவு ஆகிய தமிழ் பிரதேச செயலகங்களின் ஒட்டுமொத்த கட்சியின் பணிக்காக

இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏலவே அமைப்பாளர் வெள்



ளையன் வினோகாந்த், கட்சியின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கான அமைப்பாளராகவும், தலைவரின் சிங்கள, தமிழ் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நவராத்திரி விழா

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

நவராத்திரி விழா ஆரம்பமாகியுள்ள இந்நிலையில் இந்து ஆலயங்களிலும், பாடசாலைகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் இவ்விழா மிகவும் சிறப்பான முறையில் தொடர்ந்து ஒன்பது நாட்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் நவராத்திரி விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மாங்காடு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நவராத்திரி பூஜைகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

ஆலயத்தின் மூலமூர்த்தியான மாணிக்கப்பிள்ளையாருக்கு பூஜைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் விசேடமாக கொலு வைத்து அமைக்கப்பட இஸ்மானத்தில் நவராத்திரி பூஜைகள் முப்பெரும் தேவிகளுக்கு இடம்பெறுகின்றன.

பூஜைகள் யாவும் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ பே.கிருஸ்ணமூர்த்தி குருக்கள் தலைமையில் நடைபெற்ற்று வருகின்றன.

நவராத்திரி என்பது "ஒன்பது இரவுகள்" என்று பொருள் படுகின்றன. அமாவாசையை அடுத்து வரும் ஒன்பது நாட்களும், நவராத்திரி எனப்படுகிறது. சந்திர சுழற்சியின் முதல் ஒன்பது நாட்கள் பெண் தன்மையாக கருதப்படுகின்றது. தெய்வீகத்தின் பெண் தன்மையாகக் கருதப்படும் தேவிகளுக்கு, இது மிகச் சிறப்பான காலமாகவும் நோக்கப்படுகின்றன.

இந்நிலையில் முதல் மூன்று நாட்களும், துர்க்கை அம்மனுக்கும், அடுத்த மூன்று நாட்களும் லக்ஷமிக்கும் இறுதி மூன்று நாட்களும் கல்வித் தெய்வமான சரஸ்வதிக்கும் விழாக்கள் இடம்பெற்று பத்தாம் நாள் விஜயதசமி அன்று ஆயுத பூஜை. ஏடு தொடக்குதலுடன் நிறைவு பெறும்.



பலஸ்தீனில் இடம்பெறும் பயங்கரவாத தாக்குதலை கண்டித்து மூதூரில் நேற்று (20) ஜும் ஆ தொழுகையின் பின்னர் அமைதி வழி போராட்டமொன்று மணிக்கூட்டு கோபுர சந்தியில் இடம்பெற்றது. (படம் தம்பலகாமம் குறூப் நிருபர்)

## நாவிதன்வெளியில் போதைப்பொருள் பாவனை விழிப்புணர்வு வீதி நாடகம்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு வீதி நாடகம் நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதான வீதியில் பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பிரதேச செயலகத்தின் சிறுவர், பெண்கள் பிரிவு மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி என்பன ஒன்றிணைந்து நடாத்திய வீதி விழிப்புணர்வு நாடகம் போதைப்பொருள் பாவனையால் பெண்கள், சிறுவர்களுக்கு ஏற்படும் வன்முறைகள் மற்றும் அதனை தவிர்க்கும் வழிமுறைகள் தொடர்பானதாக அமைந்திருந்தது.

வீதி நாடகத்தில் தற்காலத்தில் வீட்டு சூழலில் நடைபெறும் போதைப் பொருள் பாவனை சிறுவர்கள் மீதான வன்முறை போன்றவற்றை தத்ரூபமாக சித்தரிக்கின்ற வடிவத்தில் அமைந்திருந்தது. இது பலரது உள்ளத்தையும் கவர்ந்திருந்தது.

## கல்முனை மாநகர சபையில் ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு பிரியாவிடை



(சாய்ந்தமருது விசேட நிருபர்)

கல்முனை மாநகர சபையில் ஊழியர்களாக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் கே.கந்தசாமி, ஐ. இராமச்சந்திரன் ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (16) மாலை நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், சுகாதாரப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக் ஆகியோர் இரு ஊழியர்களினதும் நீண்ட கால அர்ப்பணிப்பு நிறைந்த உன்னத சேவைகள் பற்றி எடுத்துரைத்து, வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரிவுத் தலைவர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## கோணாவத்தை ஆற்றின் துப்புரவு பணிகளுக்காக ரூ. 2 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன், ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்)

அட்டாளைச்சேனை சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றின் துப்புரவு பணிகளுக்காக முதற்கட்டமாக இரண்டு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சர் றொஸான் றணசிங்கவின் பணிப்புரையின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் அஜீத் இரண்டு மில்லியன் ரூபாய் நிதியை இதற்காக வழங்கியுள்ளார்.

நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜீத்தை கிழக்கு மாகாண முன்னாள் வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை சந்தித்தார்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் ஆகில் அகமட்டும் கலந்து கொண்டார்.

## கொக்கட்டிச்சோலையில் புதிய ஆயுர்வேத வைத்தியசாலை திறந்துவைப்பு!



(கல்லடி குறூப்நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலகப்பிரிவில் புதிய ஆயுர்வேத வைத்தியசாலை பிரதேச மக்களின் தேவை கருதி நேற்றுமுன்தினம் (19) திறந்து வைக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி பகுதியில் வாரத்திற்கு ஒருமுறை சிகிச்சை வழங்கும் நோக்கில் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சுகுணன் உட்பட சுகாதாரத் துறை அதிகாரிகள், பிரதேச மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

# தலவாக்கலையில் ஆடையகத்தில் ஜெனரேட்டர் புகை கசிவு

## 10 பேருக்கு மூச்சுத்திணறல் பாதிப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)

தலவாக்கலை நகரில் இயங்கும் ஆடையகமொன்றில் பணியாற்றி வரும் 10 பேருக்கு திடீரென ஏற்பட்ட சுவாச கோளாறு காரணமாக அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தலவாக்கலை நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டமையால் ஆடையகத்தில் ஜெனரேட்டர் மூலம் மின்சாரத்தை பெற இயக்கியுள்ளார்.

இச்சமயத்தில் ஜெனரேட்டரிலிருந்து வெளியான புகையினால் ஆடையகத்தில் பணியாற்றிய 09 பெண்கள் மற்றும் ஆண் ஒருவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு மயங்கியுள்ளதுடன் அதிகமாக இருமலும் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஊழியர்களை லிந்துலை வைத்திய சாலைக்கு கொண்டு சென்று அங்கு அனுமதித்த பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இவர்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் ஜெனரேட்டர் புகையினால் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. எனினும் உடனடியாக அளிக்கப்பட்ட சிகிச்சையினால் அனைவரும் காப்பாற்றப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நுவரெலிய மாவட்ட வைத்தியசாலை அதிகாரி தெரிவித்தார்.

# இந்திய வம்சாவளி மக்களை இலங்கைத் தமிழர் என அடையாளப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது

## வடிவேல் சுரேஷ் எம்.பி

(ஊவா சுழற்சி நிருபர்)



இந்திய வம்சாவளி தமிழ் மக்களை இலங்கைத் தமிழர் என அடையாளப்படுத்த பதிவாளர் திணைக்களத்தால் முற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அண்மையில் பதிவாளர் நாயகத்தால் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் மாவட்ட பதிவாளர்களுக்கும் மேலதிக மாவட்ட பதிவாளர்களுக்கும் அனுப்பப்பட்டுவருகின்ற சுற்றுநிரூபத்தில் அரசாங்க காரியாலயங்கள், பிறப்புச்சான்றிதழ் மற்றும் அடையாளப்படுத்தக் கூடிய அனைத்து ஆவணங்களிலும் இனத்தை குறிப்பிடும் பொழுது எங்களுடைய இந்திய வம்சாவளி தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் இந்திய தமிழர் சோனகர் என்பதற்கு பதிலாக அந்த பதத்தினை நீக்கி இலங்கை தமிழர் சோனகர் என குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மலையக மக்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இதனை வன்மையாக கண்டிக்கின்றேன். இது என்னுடைய இனத்தையும் சமூகத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

200 வருடமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்திய வம்சாவழி மக்கள் இந்திய அரசாங்கத்தின் பயனாக பல நன்மைகளை பெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த நாடு இவ்வாறான ஒரு மோசமான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளதை நான் வன்மையாகக் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

# சடலம் மீட்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

சாமிமலை பகுதியிலுள்ள ஓல்டன் தோட்ட மின்னா பிரிவில் 34 வயதுடைய இரண்டு குழந்தைகளின் தந்தையொருவர் நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய உதவி அதிகாரி ஆனந்த பத்ம சிறீ மற்றும் சார்ஜன் சிவகுமார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு சென்று மேலதிக விசாரணைக்காக சடலத்தை அனுப்பிவைத்தனர்.

உயிரிழந்தவர் மனைவியை விட்டு பிரிந்திருந்தமையால் அதிக உளைச்சலுடன் இருந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சடலத்தின் மீதான பிரேத பரிசோதனை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் இடம்பெறவுள்ளதாக தெரியவருகின்றது.

## மலைச்சாரல்

# குடிசன மதிப்பீட்டில் மலையக மக்களை இந்திய வம்சாவளி தமிழர்கள் என குறிப்பிடுவதே சிறந்தது

## இராதாகிருஸ்ணன் எம்.பி

(நுவரெலியா தினகரன் நிருபர்)



அரசாங்கத்தின் குடிசன மதிப்பீட்டில் மலையக மக்களை இந்திய வம்சாவளி தமிழர்கள் என குறிப்பிடுவதே சிறந்தது என இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரசாங்கம் தற்பொழுது இலங்கையில் குடிசன மதிப்பீட்டை ஆரம்பித்துள்ளது. மலையக மக்களை மலையக தமிழர்கள் என குறிப்பிடுவதா?அல்லது இந்திய வம்சாவளி தமிழர்கள் என குறிப்பிடுவதா? இலங்கைத் தமிழர்கள் என குறிப்பிடுவதா?என்ற கேள்வி எழுந்துள்ளது.

இன்றைய நிலையில் நாம் எங்களை இந்திய வம்சாவளி தமிழர்கள் என்று குறிப்பிடுவதே சிறந்தது.ஏனெனில் நாம் இலங்கைத் தமிழர்கள் என குறிப்பிடுவோமேயானால் அது வடகிழக்கு தமிழர்களையும் எங்களையும் ஒரே எண்ணிக்கையில் குடிசன மதிப்பீட்டில் காட்டிவிடும்.

நாம் எங்களை இந்திய வம்சாவளி தமிழர்கள் என்றே குறிப்பிட வேண்டும்.அப்படி குறிப்பிடுவதே எமக்கு பொருத்தமானதாகவிருக்கும்.இலங்கையில் எம்முடைய அடையாளம் எப்படி இருக்க வேண்டும் என்ற விவாதத்தை இப்பொழுது நாம் முன்வைக்க வேண்டிய தேவைப்பாடுகள் இல்லை.

இச்சந்தர்ப்பத்தில் பலரும் பல விடயங்களை குறிப்பிட்டு எங்களுடைய மக்களை திசைதிருப்புவதற்கு முயற்சி செய்கின்றனர்.நாம் இலங்கையில் எவ்வாறான ஒரு அடையாளத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடி ஒரு தீர்மானத்திற்கு வர முடியும்.

மலையக மக்கள் என்ற அடையாளத்தை நாம் கொண்டிருப்பதும் மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் எமது அரசியல் ரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு இது மிகவும் முக்கியமாக அமைகின்றது. எனவே இவ்விடயங்களை கருத்திற் கொண்டு நாம் அனைவரும் இம்முறை குடிசன மதிப்பீட்டில் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்று குறிப்பிடுவதே சிறந்த ஒரு விடயமாக அமையும் என்பதே எனது நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்தார்.




இந்தியாவிலிருந்து இராமாயன் தர்ஷன் குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரை இக்குழுவினர் சந்தித்து அவர்களிடமிருந்து பாராட்டுப் பத்திரம் பெற்றுக்கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

# வடக்கின் உதயம்

### மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நண்டு வலைகள் வழங்கி வைப்பு

(மன்னார் குறூப் நிருபர்)

மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தால் யாழில் கடந்த (19) நண்டு வலைகள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிவாரணம் வழங்கும் நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே. ஜாட்சன் பிகிராடோ, மெசிடோ நிறுவன பணியாளர்கள், யாழ். மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் சுப்பிரமணியம் சிவகுமாரன் ஆகியோர் பங்கேற்றனர். இதில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 52 பயனாளிகளுக்கு தலா 45 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நண்டு வலைகள் வழங்கப்பட்டன.

## யாழில் மாணவர்களை மிரட்டி கொள்ளை மூவர் கைது

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்து வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டு வந்த மூன்று சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதிகளிலுள்ள தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்று வரும் மாணவர்களை இலக்கு வைத்து, ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் மாணவர்களை வழிமறித்து மிரட்டி அவர்களிடமிருந்து பணத்தை வன்முறை கும்பலைச் சேர்ந்த சில இளைஞர்கள் கொள்ளையடித்து வந்துள்ளனர்.

இதுகுறித்து யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , மூன்று சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

அத்துடன் கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் கொக்குவில் , நல்லூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களுடன் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட மேலும் சில இளைஞர்களை அடையாளம் கண்டுள்ளமையால் அவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். பல்கலை மாணவர்களின் நினைவேந்தல்

(யாழ். விசேட நிருபர்)



பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ். பல்கலை மாணவர்களின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ். பல்கலைகழகத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில், நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில், உயிரிழந்த மாணவர்களின் உருவப் படத்திற்கு, பல்கலை மாணவர்கள் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான விஜயகுமார் சுலக்சன் மற்றும் நடராஜா கஜன் ஆகியோர் கடந்த 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி இரவு, கொக்குவில் குளப்பிட்டி சந்திக்கு அருகில் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

## யாழில் சிறுவன் மீது கத்தி குத்து மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன் கைது

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞனொருவன் சிறுவன் மீது கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தெல்லிப்பளை பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்.புறநகர் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் , தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு அருகிலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

வீட்டிலிருந்த உறவினரான சிறுவன், உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் வீட்டில் படுத்திருந்த வேளை சிறுவன் மீது கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

அதனை அவதானித்த சிறுவனின் பெற்றோர், தமது பிள்ளையை இளைஞனிடமிருந்து பாதுகாத்து, வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், பலாலி பொலிஸாருக்கும் அறிவித்தனர்.

அதனையடுத்து பலாலி பொலிஸார் கத்திக் குத்து தாக்குதல் நடாத்திய இளைஞனை கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## விஷமிகளால் மீன்பிடி உபகரணங்கள் தீக்கிரை

(கரவெட்டி தினகரன், நாகர்கோவில் விசேட நிருபர்கள்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் 25 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. வடமராட்சி கிழக்கு, உடுத்துறை பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் ஒருவருக்கு சொந்தமான மீன்பிடி படகு, அதன் வெளியிணைப்பு இயந்திரம், வலைகள் உள்ளிட்டவையே கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தீக்கிரையாக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு சுமார் 25 இலட்சம் ரூபா எனவும் , சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளி தெரிவித்தார்.

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

# முன்பள்ளி மாணவர்களுக்கு இணையவழி இலத்திரனியல் கல்வி முறைமை ஆரம்பம்

(ஓமந்தை விசேட நிருபர்)



முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட கள்ளப்பாடு தெற்கு முகிலன் முன்பள்ளியில் Blue Brick School என்ற இணையவழி இலத்திரனியல் கல்வி முறைமை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த அமரர் திரு. லூயிஸ் போல் நினைவாக, அவருடைய மகனான திரு.றோஹன் போல் மற்றும் அவரது குடும்பத்தினரால் நிதியுதவி அளிக்கப்பட்டு, விசன்ஸ் குளோபல் எம்பவர்மன்ற் நிறுவனத்தினால் இத்திட்டமானது முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கு முகிலன் முன்பள்ளியில் நேற்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டது.

இதன்போது விசன்ஸ் நிறுவனத்தினால் கள்ளப்பாடு தெற்கு முகிலன் முன்பள்ளிக்கு 10 Tabs மற்றும் 10 ஹெட் செட் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் உ.சுரேஷ்குமார் சிறப்பு விருந்தினர்களாக விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ந.தெய்வேந்திர ராஜா, விசன்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அ.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் கள்ளப்பாடு தெற்கு கிராம சேவையாளர், கள்ளப்பாடு தெற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர், விசன்ஸ் நிறுவனத்தின் அலுவலக உத்தியோகத்தர்கள், கிராமிய அமைப்புக்கள், அயல் முன்பள்ளி ஆசிரியர்கள், கள்ளப்பாடு தெற்கு முகிலன் முன்பள்ளி பெற்றோர்கள், முன்பள்ளி மாணவர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.




தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசசபையின் வரணிப் பொது நூலகத்தால் அண்மையில் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டன.

வரணி பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டிகளில் வரணிப் பிரதேச பாடசாலை மாணவர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது சித்திரப்போட்டி,ஒட்டுச் சித்திரப்போட்டி, நுண்ணறிவு மற்றும் பொது விவேகம் ஆகிய போட்டிகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் : சாவகச்சேரி விசேட நிருபர்)




# ஆடவர் ஆடைகளுக்கு ஆடம்பரம், பாரம்பரியம், புத்தாக்கத்தை மீள்வரையறை செய்யும் Emerald இன் 'EVOLUXE'




இலங்கையின் முன்னணி ஆடவர் ஆடை வர்த்தக நாமமான *Emerald*, ஆடம்பர மற்றும் ஸ்டைலின் சாராம்சத்தை மீள் மறுவரையறை செய்யும் ஒரு பிரம்மாண்டமான பேஷனை, அவர்களது சமீபத்திய *AW23* (இலையுதிர்கால / குளிர்கால 2023) காட்சிப்படுத்தல் மூலம், "*EVOLUXE*" நிகழ்வை காட்சிப்படுத்தி, பேஷன் ஆர்வலர்களை மீண்டும் பிரம்மிக்க வைத்துள்ளது. வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலின் கிராண்ட் போல்ரூமில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, பேஷன் புத்தாக்க கண்டுபிடிப்புகளில் *Emerald* கொண்டுள்ள எல்லைகளைத் தாண்டிய அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

'*EVOLUXE*' எண்ணக்கருவானது, பரிணாமத்தையும், ஆடம்பரத்தையும் வசீகரிக்கின்ற இணைப்பாக அமைத்ததோடு, காலத்துடனான கண்ணோட்டம் பற்றிய கருத்து எவ்வாறு உருவாகியுள்ளது என்பதையும் காட்டுகிறது.

இன்றைய உண்மையான ஆடம்பரமானது, களியாட்டத்தை மட்டுமல்லாது, நெறிமுறையை கருத்திலெடுத்தல், புத்தாக்கம் மற்றும் தனித்துவத்தையும் உள்ளடக்கியுள்ளது எனும் கருத்தை இந்த நிகழ்வு வெளிப்படுத்தியது. பாரம்பரிய கண்ணோட்டத்திலிருந்து சமகால அவசியம் வரை, நவீன உலகில் ஆடம்பரத்தின் மாறும் பயணத்தை '*EVOLUXE*' கொண்டாடியது.

இந்த பேஷன் ஷோ குறித்து கருத்துத் தெரிவித்த *Emerald* நிறுவனத்தின் பிரதம வணிக அதிகாரி அஹ்மத் இக்ராம், "தையல் கலைச் சிறப்பின் அடையாளமான *Emerald*, ஆடம்பரத்தை மீள்வரையறை செய்கின்ற '*EVOLUXE*' பேஷன் கொண்டாட்ட நிகழ்வை நடத்தியதில் பெருமை கொள்கிறது.

எமது வடிவமைப்புக் குழுவினர் வெளிப்படுத்திய ஆர்வமும் படைப்பாற்றலும் உண்மையிலேயே பிரமிக்க வைக்கிறது. பேஷனின் எல்லைகளைத் மேலும் விரிவாக நகர்த்திச் செல்வதற்கும், நேர்த்தியான மற்றும் நிலைபேறான தன்மைக்கான புதிய தரங்களை அமைப்பதற்குமான எமது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை இந்த நிகழ்வு கோடிட்டுக் காட்டுகிறது. '*EVOLUXE*' ஆனது ஆடம்பரத்தை மீள்வரையறை செய்வதற்கும், ஆடவர் ஆடைகளில் புத்தாக்கங்களை ஏற்படுத்துவதற்குமான எமது பயணத்தின் ஆரம்பமாகும். இந்த நிகழ்வை மகத்தான வெற்றியடையச் செய்தமைக்காக, எமது அர்ப்பணிப்புமிக்க குழுவினர் முதல் மதிப்பிற்குரிய விருந்தினர்கள் மற்றும் பங்காளிகள் வரை அனைத்து பங்குதாரர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்." என்றார்.

# நுகர்வோரின் வசதியை மேம்படுத்தும் யூனிலீவரின் uStore.lk




யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் (*Unilever Sri Lanka*) உத்தியோகபூர்வ இலத்திரனியல் வர்த்தகத் தளமான *uStore.lk*, தனது வாடிக்கையாளர்களுக்கு பலசரக்கு பொருட்களின் கொள்வனவை மிகவும் வசதியாகவும் நம்பகமானதாகவும் சிறப்பாகவும் மாற்றும் முயற்சியில் *Uber Eats* மற்றும் *Celeste Daily* ஆகியவற்றுடன் சமீபத்தில் ஒரு கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது. இந்த கூட்டாண்மையானது, தற்போது *uStore.lk* தளத்தை சிரமமின்றி அணுகுவதற்கு *Uber Eats* மூலம் வசதியை ஏற்படுத்துகிறது. வாடிக்கையாளர்கள் *Uber Eats* இல் உள்ள *uStore.lk* விற்பனை நிலையத்தை பார்வையிட்டு, பொருட்களை கொள்வனவு செய்வதன் மூலம், *uStore.lk* இலுள்ள உயர்தர தயாரிப்புகளை தங்களது வீட்டுக்கே நேரடியாக வரவழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

*Jaysons Group of Companies* இன் அங்கமாக உள்ள *Celeste Daily* ஆனது, *Uber Eats* உடன் இணைந்து கடந்த 3 வருடங்களில் *50,000* வாடிக்கையாளர்களுக்கு, அதன் இயங்குதளத்தின் மூலம், தேவைக்கேற்ப பலசரக்குப் பொருட்களை வழங்கும் சில்லறை விற்பனை சந்தையில் முன்னோடியாக இருந்து வருகின்றது. *Uber Eats* இல் *uStore.lk* இன் தேவையைப் பூர்த்தி செய்யும் பங்குதாரராக உள்ள *Celeste Daily* ஆனது, இங்கு அத்தியாவசிய செயற்பாட்டு ஆதரவை வழங்குகிறது.

# வாடிக்கையாளர்களின் நலனுக்காக நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் உடன் கூட்டுச் சேர்ந்த Quickee




*Quickee* இலங்கையில் உள்ள இணைய வர்த்தக கொள்வனவில் புரட்சியை ஏற்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களின் வசதிக்கு முன்னுரிமை அளிப்பதற்குமான தனது முயற்சியின் அடிப்படையில், அண்மையில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் (*American Express*) கடன் அட்டைகளை *Quickee.com* தளத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் (*Nations Trust Bank American Express*) மற்றும் *Quickee* இடையேயான இந்த கூட்டாண்மையானது மேம்பட்ட வசதியை வழங்குவதன் மூலம் அதன் வாடிக்கையாளர்களுக்கு மகத்தான பெறுமதியை சேர்க்கும்.

இலங்கையர்களின் விருப்பமான இணைய வர்த்தக சந்தையான *Quickee.com*, அதன் ஒருங்கிணைந்த விநியோக சேவையை பூர்த்தி செய்யவும், தனித்துவமான டிஜிட்டல் வர்த்தக தளத்தை உரிய முறையில் நடாத்திச் செல்லும் வகையிலும், தனது சொந்த விநியோக குழுவினரையும் சொந்த அழைப்பு மையத்தையும் கொண்ட அர்ப்பணிக்கப்பட்ட பௌதீக மையத்துடன் தனித்துவமாக செயற்பட்டு வருகிறது. அந்த வகையில் அதன் அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் '*Convenience Delivered*' (சௌகரிகமாக கொண்டு சேர்க்கப்படும்) எனும் அதன் வாக்குறுதியுடன், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடனட்டையுடன் இணைந்து, புதிய சலுகைகளின் மூலம் அதன் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட வசதியை வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது.

# மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு ஆக்ஸிஜன் விநியோக முறையை நன்கொடையாக வழங்கியது செலிங்கோ லைஃப்



செலிங்கோ லைஃப் சமூகத்தின் முயற்சியின் காரணமாக, மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் தற்போது *300* படுக்கைகளுக்கு உயிர்காக்கும் ஆக்ஸிஜனின் தடையற்ற விநியோகம் சென்றடைகிறது.

இலங்கையின் ஆயுள் காப்புறுதி சந்தையின் முன்னணி நிறுவனம், மருத்துவமனையின் மத்திய ஆக்ஸிஜன் செறிவூட்டியை வார்டுகளுடன் இணைக்கும் குழாய் வலையமைப்பை நிர்மாணிப்பதற்காக ரூபா *12.3* மில்லியனை முதலீடு செய்து, சிலிண்டர்களை மீண்டும் நிரப்பி அவற்றை *22* ஏக்கர் வளாகம் முழுவதும் உள்ள வார்டுகளுக்கு கொண்டு செல்லும் சிரமத்தையும், வீணடிக்கப்படும் நேரத்தையும் மற்றும் அதிக செலவை ஏற்படுத்தும் நடைமுறையையும் நீக்கியுள்ளது.

இந்த திட்டத்தின் விளைவாக, மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவு (*ICU*) மற்றும் பிற வார்டுகள் இப்போது ஆக்ஸிஜனில் தன்னிறைவு பெற்றுள்ளன, இது சிகிச்சையின் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது, அதே நேரத்தில் மருத்துவமனையின் ஆக்ஸிஜன் செறிவூட்டி அதிகபட்ச பயன்பாட்டை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செலிங்கோ லைஃப் நிறுவனத்தால், *500,000* ரூபாய்க்கு மேல் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த விழாவில் புதிய ஆக்ஸிஜன் விநியோக முறை முறைப்படி மருத்துவமனையில் கையளிக்கப்பட்டது.

விழா ஒன்றில் பேசிய செலிங்கோ லைஃப் தலைவர் ஆர். ரெங்கநாதன், "எங்கள் நிறுவனம் எப்போதும் தனது வெற்றியை அதன் பங்குதாரர்களுடன் பகிர்ந்து கொள்கிறது. பொது மக்களும் அத்தகைய பங்குதாரர்களில் ஒருவர். இலங்கையானது உலகின் மிகச் சிறந்த சுகாதார அமைப்புகளில் ஒன்றாகும், என்றார்.

# Mahindra Yuvo Tech+ 585 உழவு இயந்திரம் அறிமுகம்



*DIMO Agribusinesses* மற்றும் அதன் நீண்டகால பங்காளியான *Mahindra Tractors* உடன் இணைந்து, இலங்கை விவசாய சமூகத்திற்கு சமீபத்திய தொழில்நுட்பத்துடன் கூடிய *50* குதிரை வலு (*HP*) கொண்ட *Mahindra Yuvo Tech+ 585* உழவு இயந்திரத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

*Mahindra Yuvo Tech+ 585* உழவு இயந்திரத்தை இலங்கை பாவனையாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு, அநுராதபுரம், கலன்பிந்துனுவெவவில் உள்ள அழகிய வயல்வெளியில், பெருமளவிலான விவசாயிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. அத்துடன் இந்நிகழ்வில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு இந்த அதிநவீன உழவு இயந்திரத்தை சோதித்துப் பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

மஹிந்திராவின் அடுத்த தலைமுறை *Yuvo* உழவு இயந்தித் தொடரின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள இந்த உழவு இயந்திரம் பல்வேறு தனித்துவமான அம்சங்களுடன் வருவதோடு, இதன் காரணமாக அதன் செயற்றிறன் மற்றும் பல்வகை செயற்பாட்டு அம்ச திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

4 வருட உத்தரவாதத்துடன் வழங்கப்படும் இந்த புத்தம் புதிய உழவு இயந்திரம், உள்ளூர் விவசாயத் துறையின் வளர்ச்சியில் புரட்சிகரமான மாற்றத்தை நிச்சயம் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

# பொறியியல் நெசவின் திறனை மறுவரையறை செய்யும் Athleisure Wear தொகுப்பு அறிமுகம்



*MAS Holdings* நிறுவனத்தின் கீழ் இயங்கும் பன்முகப்படுத்தப்பட்ட ஆடை தயாரிப்பு நிறுவனமான *MAS Matrix*, அதன் சமீபத்திய தயாரிப்பு தளமான '*MVTM*' ஐ அறிமுகப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது.

*flatknit* தயாரிப்புகளுக்கான ஒரு மாற்றத்தில், *MVTM* எல்லையின் தொழில்நுட்ப மற்றும் தயாரிப்புத் திறன், விளையாட்டு ஆடைகளில் புரட்சியை ஏற்படுத்தத் தயாராக உள்ளது. நவீன, வேகமான வாழ்க்கை முறைக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட இந்தத் தொகுப்பானது, அதிக செயல்பாடு கொண்ட, பல்துறை மற்றும் நாகரீகமான வடிவமைப்புகளை வழங்குகிறது.

*MVTM* என்பது இயக்கம் (*Movement*) மற்றும் வேகத்தின் (*Momentum*) கலவையாகும். இந்தப் பல்துறை ஆடைகள் (*Versatile Pieces*) ஒரு நாள் அல்லது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தயாரிப்பு வரிசையானது இயக்கச் சுதந்திரத்தை அனுமதிக்கும் அதே வேளையில் வசதியான மற்றும் செயல்பாட்டை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், நவீன வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் *MVTM* தயாரிப்புகள் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றன.

*Matrix* இன் திறன்கள்குறித்து கருத்து தெரிவித்த *MAS Matrix* பிரதம நிறைவேற்று அதிகாரி பாலித லியனகே, "*Matrix*இல் எங்கள் பயணம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாங்கள் காலணிகளுக்கான பின்னப்பட்ட ஷூ கவர்களை (*Knitted Uppers*) உருவாக்குவதுடன் பின்னல் ஆடைகள் மற்றும் பிற மேம்பட்ட தொழில்நுட்பங்களிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது." எனத் தெரிவித்தார்.

# எம்பிலிபிட்டியவில் தடம் பதிக்கும் சியபத பினான்ஸ்



நிதிச் சேவைகளில் நம்பகமான பெயரான சம்பத் வங்கி பிஎல்சியின் முழு உரிமம் பெற்ற துணை நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி, இலங்கை மக்களுக்கு இணையற்ற நிதி சேவைகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை மேலும் விரிவுபடுத்தி, அண்மையில் எம்பிலிப்பிட்டியவில் தனது மற்றுமொரு கிளையை திறந்தது.

# 'Project Delta'வை அறிமுகம் செய்யும் Sunshine Consumer



*Sunshine Consumer Lanka (SCL)*, சன்ஷைன் ஹோல்டிங்ஸின் நுகர்வோர் பிரிவான இலங்கையின் பல்வகைப்பட்ட நிறுவனங்களின் குழுவானது, சவாலான பெரிய பொருளாதார நிலைமைகளை எதிர்கொண்டு வெற்றிகரமாக முன்னேறுவதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கையாக '*Project Delta*' என்ற புதிய புரட்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் நோக்கம், நிறுவனத்தின் விநியோக வலையமைப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையை மிகவும் திறமையாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதும், மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து, கோவிட் தொற்றுநோய்க்குப் பிந்தைய காலத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் நிறுவனமாக *Sunshine Consumer* ஐ உருவாக்குவதும் ஆகும்.

இந்நிறுவனம் தனது அனைத்து வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளையும் கையாளும் விதத்தை மாற்றுவதற்கான ஒரு விரிவான முயற்சியாக '*Project Delta*' ஏப்ரல் *2023* இல் ஆரம்பிக்கப்பட்டது. *Sunshine Consumer* தனது விற்பனை நடவடிக்கைகளில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக சிரேஷ்ட சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை நிபுணர் நந்தன விக்கிரமகேயின் வழிகாட்டுதலின் கீழ் *Project Delta*இன் முதல் கட்டத்தை ஆரம்பித்தது.

"*Sunshine Consumer*இல் நாங்கள் சவாலான பொருளாதார நிலைமைகளில் முன்னேறும்போது புத்தாக்கம் மற்றும் சூழலுக்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதிபூண்டுள்ளோம். எமது ஒட்டுமொத்த விற்பனை நடவடிக்கையில் மேற்கொள்ளப்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு நந்தன விக்கிரமகே தலைமை தாங்கியதனால், எந்தவொரு வணிகச் சூழலிலும் வெற்றிபெறக்கூடிய வலுவான மற்றும் நெகிழ்ச்சியான விற்பனைப் பணியாளர்களை உருவாக்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்." என *Sunshine Consumer* நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஷியாம் சதாசிவம் தெரிவித்தார்.

# இரட்டைத் திரை கொண்ட Lenovo Yoga Book 9i Lenovo LOQ கேமிங் மடிக்கணினிகள் அறிமுகம்



கடந்த *2011* ஆம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்ப (*IT*) விநியோக சந்தையில் முன்னணி வகித்து வரும் *IT Gallery Computers (Pvt) Ltd.*, இலங்கையில் *Lenovo* நுகர்வோருக்கும் மற்றும் கேமிங் ஆர்வலர்களுக்கும் சமீபத்திய புதிய தயாரிப்புகளை வெளியிட்டுள்ளது. மிகவும் ஈர்க்கும் வகையிலான இரட்டைத் திரை (*dualscreen*) கொண்ட *Yoga Book 9i* மற்றும் புதிய கேமிங் மடிக்கணினியான *LOQ* ஆகியன இங்கு காட்சிப்படுத்தப்பட்ட தயாரிப்புகளில் உள்ளடங்குகின்றன. *Lenovo* வர்த்தகநாமம், சமீபத்திய புத்தாக்க கண்டுபிடிப்புகள் மற்றும் சிறந்த செயற்றிறன் ஆகிய அம்சங்களைக் கொண்ட ஒப்பற்ற தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. *Yoga Book 9i* இரட்டைத் திரை அம்சம், பல்வேறு முறையிலான செயற்பாடு, சிறந்த பொழுதுபோக்கு அம்சம் ஆகியவற்றை வழங்குகிறது. ஹைபிரிட் பணியிடங்கள் மற்றும் கூட்டங்களுக்கு இது ஏற்றதாகும். பயனர்கள் *TentMode* (கூடாரம் அமைப்பு) முறையை பயன்படுத்தி ஒரு திரையில் தாங்கள் விளக்கக்காட்சியைப் பார்த்தவாறு, அதனை இயக்கும் அதேவேளையில் முன்னால் உள்ள திரையில் விளக்கக் காட்சியை வெளியிட்டு காண்பிக்க முடியும். இங்கு *Lenovo* புதிய கேமிங் வர்த்தக நாமமான '*Lenovo LOQ*' வும் *IT* காட்சிப்படுத்தப்பட்டது. இவை புதிய மற்றும் எதிர்கால விளையாட்டு ஆர்வலர்களுக்காக வடிவமைக்கப்பட்ட சக்திவாய்ந்த மற்றும் கட்டுப்படியான விலையில் அமைந்த கேமிங் தொடர் மடிக்கணினிகளாகும். *LOQ* ஆனது உறுதியான அழகியலைக் கொண்ட, அதிகரிக்கக்கூடிய நினைவகம் மற்றும் வலுவான *CPU* திறன், *GPU* தெரிவுகளைக் கொண்டுள்ளது.

# முதல் வெற்றியை எதிர்பார்த்து இலங்கை இன்று நெதர்லாந்து அணியுடன் களத்தில்

உலகக் கிண்ணத்தில் தனது முதல் வெற்றியை எதிர்பார்த்து இலங்கை அணி இன்று (21) நெதர்லாந்துடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

லக்னோவில் நடைபெறும் இன்றைய ஆட்டம் பகல் போட்டியாக காலை 10.30 மணிக்கே ஆரம்பமாகவுள்ளது. இலங்கை அணி தனது முதல் மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்த நிலையில் இந்தத் தொடரில் பங்கேற்றிருக்கும் பலவீனமான அணியான நெதர்லாந்து அணியை வீழ்த்தி வெற்றியை ஆரம்பிப்பதற்கு முயற்சிக்கும்.

எனினும் கடந்த போட்டியில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்த நெதர்லாந்து அணியை குறைத்து மதிப்பிட முடியாது. லோகன் வான் பீக், ரோலொப் வாக் டெர் மெர்வ் மற்றும் அர்யன் டுட் போன்ற வீரர்கள் பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.



துடுப்பாட்டத்தில் ஆரம்ப வரிசை தடுமாற்றம் கண்டபோதும் கணிசமான ஓட்டங்களை பெறும் பட்சத்தில் எதிரணிக்கு சவால் கொடுக்கும் திறன் அந்த அணிக்கு உள்ளது.

உலகக் கிண்ண புள்ளிப் பட்டியலில் இன்னும் புள்ளிகளை பெறாத ஒரே அணியாக நீடிக்கு இலங்கை அணி அந்த நிலையை மாற்றுவதற்கான வாய்ப்பாக இன்றைய போட்டியை எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். அணியின் ஆரம்ப வரிசை துடுப்பாட்டம் வலுவாக இருந்தபோதும் மத்திய வரிசை தடுமாற்றம் கண்டுள்ளது. அனைத்தையும் விட அணியின் பந்துவீச்சு பலவீனமாக உள்ளது.

இளம் இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுசங்க மாத்திரம் சிறப்பாக பந்துவீசுகின்றபோதும் வேறு எந்த வீரரும் கைகொடுப்பதாக இல்லை. குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷனவும் ஆதிக்கம் செலுத்த தடுமாறி வருகிறார்.

மதீஷ பதிரணவுக்கு பதில் அழைக்கப்பட்ட லஹிரு குமாரவும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 4 ஓவர்களுக்கு 47 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். எனவே உலகக் கிண்ணத்தில் தொடர்ந்து முன்னேறுவதற்கு தனது பந்துவீச்சை சரி செய்ய இலங்கை அணி இன்று முயற்சிக்கும்.

இன்றைய போட்டி நடைபெறும் லக்னோ மைதானத்திலேயே இலங்கை அணி அவுஸ்திரேலியாவையும் எதிர் கொண்டிருந்தது. இந்த மைதானம் பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் இரண்டுக்கும் உதவுவதாக உள்ளது. மைதானத்தில் சராசரி ஓட்டங்கள் 226 ஆக இருக்கும் நிலையில் ஆட்டம் எந்த திசைக்கும் மாற வாய்ப்பு கடைசிவரை உள்ளது.



## பயிற்சியை ஆரம்பித்தார் தசுன்

வலது கால் தொடை பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக உலகக் கிண்ண குழாத்தில் இருந்து நீக்கப்பட்ட இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்க பயிற்சிகளை ஆரம்பித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள நெதர்லாந்துக்கு எதிரான போட்டிக்காக லக்னோ மைதானத்தில் பாயிற்சி பெற்றுவரும் இலங்கை அணியுடன் அவர் நேற்று முன்தினம் (19) ஆறு மணி நேரம் அளவு பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தசுன் ஷானக்கவின் காயம் குணமடைய மூன்று வாரங்கள் வரை எடுத்துக்கொள்வதாகக் கூறப்பட்ட நிலையிலேயே அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டு அவருக்கு பதில் மேலதிக வீரராகச் சென்ற சாமிக்க கருணாரத்ன சேர்க்கப்பட்டார். தசுனுக்கு பதில் இணைக்கப்பட்ட கருணாரத்ன அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் விளையாடியபோதும் அவர் பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் இரண்டிலும் சோபிக்கத் தவறினார்.

காயமடைந்தபோதும் இலங்கை அணியின் மேலதிக வீரராக தசுன் ஷானக்க அணியுடன் தக்கவைக்கப்பட்டுள்ளார். இந்த சூழலில் மேலும் இரு மேலதிக வீரர்களாக வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர மற்றும் அனுபவ வீரர் அஞ்சலோ மதியுஸ் இணைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 98 அஷ்ரக்கியன் வெற்றி

அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்

நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையின் 98 அஷ்ரக்கியன் கிரிக்கெட் அணி அண்மையில் நடைபெற்ற அனீஸ் மற்றும் பர்சாத் ஞாபகார்த்த கிண்ண கிரிக்கெட் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் நிந்தவூர் லெஜெண்ட் அணிக்கு எதிரான இந்தப் போட்டியில் 98 அஷ்ரக்கியன் அணி 79 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.



தங்களோடு கல்வி கற்று தங்களை விட்டும் பிரிந்த இரண்டு நண்பர்களை நினைவுகூரும் வகையிலேயே இப்போட்டி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு எதிரான பாக். இளையோர் அணி அறிவிப்பு

இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான பாகிஸ்தான் 19 வயதுக்கு உட்பட்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளும் ஆடிய ஒரே ஒரு இளையோர் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் இளையோர் அணி வெற்றியீட்டிய நிலையில் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் நாளை (22) தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அனைத்து போட்டிகளும் கராச்சி, தேசிய வங்கி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் இளையோர் டெஸ்ட் போட்டிக்கு தலைமை வகித்த சாத் பயிக் ஒருநாள் தொடரிலும் தலைவராக செயற்படவுள்ளார். பாக். குழாம்: சாத் பயிக் (தலைவர் மற்றும்



விக்கெட் காப்பாளர்), அப்தாப் அஹமட், அஹமது ஹுஸைன், அலி ராசா, அரபாத் மின்ஹாஸ், ஹம்சா நவாஸ், ஹாரூன் அர்ஷாத், முஹமது அம்மார், முஹமது ஹுசைபா, முஹமது இப்திசாம், முஹமது இஸ்மைல், முஹமது ரியா உல்லா, முஹமது தையாப் ஆரிப், நஜாப் கான், நவீட் அஹமது கான், ஷஹ்சைப் கான், ஷமீல் ஹுஸைன் மற்றும் உபைத் ஷா.

## நேகம நியு ஸ்டார் வெற்றி



கல்நேவ தினகரன் விசேட நிருபர்

புதிய பலளுவெவ பிளக் ஈகள் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்த அணிக்கு 11 பேர் கொண்ட மென்பந்து லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேகம நியு ஸ்டார் விளையாட்டுக் கழக அணியினர் சம்பியன் கிண்ணத்தை வென்றனர்.

புதிய பலளுவெவ பிளக் ஈகள் விளையாட்டு மைதானத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் விஜிதபுர டப்ளியு.சீ.சீ. அணியை நியு ஸ்டார் அணி 10 விக்கெட்டுகளால் இலகுவாக வீழ்த்தியது. தொடரின் சிறப்பாட்ட வீரராக விஜிதபுர டப்ளியு.சீ.சீ அணியின் பெதும் தெரிவுசெய்யப்பட்டார்

## சம்பியனானது ஹிஜ்ரா அணி



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று யங் பிளவர்ஸ் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட ‘வை.எப்.எஸ். சீ ஞாபகார்த்த சம்பியன் கிண்ணம்’ கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டுக் கழகம் சம்பியனானது. அக்கரைப்பற்று பனங்காடு அக்னி விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (14) நடைபெற்ற இச் சுற்றுத்தொடரின் இறுதி போட்டியில் அக்கரைப்பற்று யங் பிளவர்ஸ் அணியும் ஹிஜ்ரா அணியும் மோதிக்கொண்டன. இதில் வெற்றிக் கிண்ணத்தையும், ரொக்கப் பணப்பரிசினையும் அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணி பெற்றுக்கொண்டது.

## ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட் போட்டிகள் வடக்கு, கிழக்கில்

வடக்கு, கிழக்குக்கான ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட் கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகள் அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் வெற்றிகரமாக நிறைவடைந்தன. இலங்கையின் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், வலுவூட்டல், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை பரப்புவதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

பெண்கள் பிரிவில் ஒட்டுமொத்த சம்பியன்ஷிப் பட்டத்தை 81 புள்ளிகளுடன் தெஹியத்தகண்டிய தேசிய பாடசாலை அணி பெற்றுக் கொண்டது. வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயம் 47 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர் கல்லூரி 45 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. ஆண்கள் பிரிவில், 77.5 புள்ளிகளுடன் பளை மத்திய கல்லூரி சம்பியன் பட்டத்தையும், புனித. சேவியர் ஆண்கள் கல்லூரி 75 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரி 52 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.




தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தியிருந்த ஆண்டின் சிறந்த பெண் மெய்வல்லுனருக்கான விருது சிவப்பிரகாச மகளிர் கல்லூரியின் வி.தெனிஷாவுக்கு வழங்கப்பட்டது. ஆண்கள் பிரிவில் ஆண்டின் சிறந்த மெய்வல்லுனருக்கான விருது வங்காலை புனித அன்னம்மாள் கல்லூரியின் ஏ.ரொமெக்சன் லம்பேர்ட்டுக்கு வழங்கப்பட்டது. வடக்கு கிழக்கைச் சேர்ந்த 1000க்கும் அதிகமான மெய்வல்லுநர்கள் இந்த ஆண்டின் போட்டிகளில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் இலங்கையின் அபிமானம் வென்ற சொக்லட் வர்த்தக நாமமான ரிட்ஸ்பரி, இளம் மெய்வல்லுநர்களை ஊக்குவித்து கட்டியெழுப்புவதில் தன்னை அர்ப்பணித்துள்ளது.

## டைமன்ட் அணி சம்பியன்

பாலமுனை தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை கோல்ட் ஸ்டார் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்த இரவு நேர கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் டையமன்ட் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

25 அணிகள் கலந்து கொண்ட இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் அம்பாறை டையமன்ட் விளையாட்டுக் கழகமும் அட்டாளைச்சேனை அஷ்ரப் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் வெற்றியீட்டிய அணிக்கு யங் லயன்ஸ் விளையாட்டு கழகத்தின் தலைவரும், தொழிலதிபருமான ஏ.சி.நியாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தையும், காசோலையையும் வழங்கிவைத்தார்.



## யூனியன் அணிக்கு வெற்றி

மாளிகைக்காடு குறூப் நிருபர்

இளவாலை வருத்தபடாத வாலிப சங்கம் தனது 10ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்திய வாலிப கிண்ண கால்பந்தாட்ட போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் அணியை 5–4 என பெனால்டி சூட் அவுட் முறையில் யூனியர் அணி வீழ்த்தியது. சிறந்த வீரராக சென் மேரிஸ் அணியின் சிந்துஜன் தெரிவானார்.



## ஸஹீரியன் லேஜன்ஸ் கிரிக்கெட்

பெரியநீலாவணை விசேட நிருபர்

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர்களை கல்லூரியின் அபிவிருத்தியின்பால் இணைத்துக்கொள்ளும் வகையில் பழைய மாணவர்களை உள்ளடக்கிய ஸஹீரியன் லேஜன்ஸ் பிரிமியர் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 28, 29 திகதிகளில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஸஹிரியன் சுப்பர் அணியின் ஏற்பாட்டில் 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இந்த சுற்றுப் போட்டியில் 6 அணிகள் பங்கேற்கவுள்ளன. இது தொடர்பில் விளக்கும் ஊடகவியலாளர் மாநாடு கல்லூரியின் கேட் முதலியார் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.



## பாலமுனை இளைஞர் கழகம் தேசிய மட்டத்திற்கு தெரிவு



ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டமட்ட இளைஞர் கழக எல்லே விளையாட்டுப் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக பாலமுனை இளைஞர் கழக அணி மாவட்ட சம்பியனாகி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச்சுற்றுப் போட்டி பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேசத்தை பிரதிநிதிதுவப்படுத்தி விளையாடிய பாலமுனை இளைஞர் கழக அணி நாவிதன்வெளி பிரதேச செயலக அணியினரை 1–2 என்ற புள்ளியடிப்படையில் வெற்றிபெற்று 2023ஆம் ஆண்டின் மாவட்ட சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.